UNIVERSITY OF JAFFNA
LIBRARY
18 APR 2017
PERIODICALS DIVISION



**சட்டங்கள் காலத்திற்கேற்ற வகையில் சீர்திருத்தப்படல் வேண்டும்**

சட்டத்தரணி ஜெருஷா குரோசெட் தம்பையாவின் நேர்காணல்


# தேசம்

Thesam

உண்மை | நேர்மை | துணிவு

2017 மார்ச்
மாத வெளியீடு
மலர் 1. இதழ் 5

விலை ரூபா 20.00

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
ISSN 2536-8915


# ஜெனிவா விசாரணைகள் 2 வருடங்களுக்கு தாமதிப்பு

இந்திரன்

ரணில்-மைத்திரி அரசாங்கம் பதவியேற்கும் போது தமிழ் மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகளில் ஜெனீவா மனித உரிமை தொடர்பான யோசனையை பிரதானமாகக் குறிப்பிடலாம். ஆனால் அந்த வாக்குறுதிகளை மறந்து அதனை இரண்டு வருடங்களுக்கு காலதாமதம் செய்யும்படி கோரி கூட்டரசாங்கம் பிரேரணையொன்றை சமர்ப்பித்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் 34வது கூட்டத்தொடரில் பங்குபற்றியுள்ள எமது நாட்டு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இப்பிரேரணையை ஆணைக்குழுவில் சமர்ப்பித்ததோடு... 2»



exclusive

## கேப்பாபுலவு, பிலக்குடியிருப்பு

ஜீவா

கேப்பாபுலவு, பிலக்குடியிருப்பு மக்கள் ஒரு மாத காலமாக மேற்கொண்ட போராட்டம் மார்ச் மாதம் 1ம் திகதி 11.30 க்கு முடிவுக்கு வந்தது. பிலக்குடியிருப்பு மக்களின் 54 குடும்பங்களின் காணிகள் மீளவும் ஒப்படைப்பு ஆனால் கேப்பாபுலவு பூர்வீக கிராம மக்கள் தங்கள் சொந்த நிலங்களை விடுவிக்குமாறு கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். விமானப்படைக்கு அருகில் உள்ள காணியே... 2»

## சைட்டம் தனியார் பல்கலைக்கழகம் பாதாள உலக கோஷ்டியுடன் தொடர்புள்ளது

சந்திரமோகன்

மாலம்பே சட்டவிரோத சைட்டம் தனியார் பல்கலைக்கழகத்துடன் பாதாள உலக கோஷ்டிகளுக்கு தொடர்புள்ளதாக பல தகவல்கள் வெளிவந்துள்ளது.

இந்நிறுவனத்தின் பிரதான அதிகாரியென குறிப்பிடும் சமீர சேநாரத்தின பயணித்த வாகனத்திற்கு துப்பாக்கி பிரயோகம் நடத்தியது தொடர்பாக பொலிசார் விசாரணைகள் மேற்கொள்ளும்போது இந்நிறுவனத்திற்கும் பாதாள உலக... 2»

## நல்லாட்சி அரசியல் துப்பாக்கி கலாசாரம்!

யோகா


நல்லாட்சி அரசாங்கத்தில் துப்பாக்கி கலாசாரம் தொடர்கதையாக தொடர்கிறது. களுத்துறை வடக்கு சிறைச்சாலையிலிருந்து கடுவலை நீதவான் நீதிமன்றத்திற்கு பாதாள உலக கோஷ்டி சர்வதேச நபர்களை ஏற்றி வந்த சிறைச்சாலை பஸ் வண்டி மீது திங்கட்கிழமை (28-02-2017) காலை களுத்துறை மல்வத்தை பகுதியில் வைத்து துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கி சூட்டின்போது பஸ் வண்டியில் இருந்த பாதாள கோஷ்டியின் தலைவர் சமயங் உட்பட 5 கைதிகளும் இரண்டு சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் துப்பாக்கி சூட்டுக்கு பலியாகி உள்ளனர். மேலும் நான்கு சிறைச்சாலை அதிகாரிகளும் படுகாயம் அடைந்த நிலையில் நாகொட வைத்தியச்சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இதே வழக்கு தொடர்பில் சமயங் கடுவலை நீதிமன்றத்திற்கு பொலிஸாரால் அழைத்து வரப்பட்டபொழுது நீதிமன்ற வளாகத்தில் அவர் மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டு அவர் படுகாயம் அடைந்தார் என்பது குறிப்பிடக்கூடியது. அண்மை காலங்களில் நல்லாட்சி அரசாங்கத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் துப்பாக்கி சூட்டு சம்பவம் நடைபெறுவது வழமையாகி விட்டது. மட்டக்களப்பில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் நேசகுமார் விமல்ராஜ் மீது துப்பாக்கி சூட்டு நடத்தப்பட்டது. நல்லாட்சி அரசியல் திட்டமிட்டு நடைபெறும் துப்பாக்கி கலாசாரத்திற்கு ஒரு முடிவு கட்டப்பட வேண்டும்.



**தமிழ் அரசியல் தலைவர்களைவிட சக்தி வாய்ந்த அதிகாரிகள்** 05»



**மீண்டுமொரு எழுகதமிழ்** 12»



**இந்திய விவசாயிகளின் தற்கொலை: புள்ளிவிபரங்கள் சொல்லும் சேதி** 14»

1ம் பக்க தொடர்ச்சி...

**ஜெனிவா விசாரணைகளை...**

அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் அதற்கு ஆதரவு தெரிவித்திருந்தது. ஜெனிவா மனித உரிமை பிரேரணைக்கு இணங்க யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்தும், காணாமற் போனோர் தொடர்பாகவும், மனித உரிமை ஆணைக்குழுவை அமைத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் போன்ற விடயங்களை பூர்த்தி செய்திருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு விதித்திருந்தது. இம்முறை கூட்டத்தொடரை நடத்தும் சமயத்திலும் அவ்விடயங்களை இலங்கை அரசு பூர்த்திசெய்யவில்லை என்பதால் இன்னும் இரண்டு வருடங்கள் அதற்கு தேவைப்படும் என்ற அடிப்படையிலேயே வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்த யோசனையை சமர்ப்பித்தார். இதனால் யுத்தத்தாலும் அதற்கு பிற்காலத்திலும் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புகள் மங்கி வருவதோடு பல்வேறு எதிர்பார்புகளுடன் இன்றைய கூட்டரசாங்கத்தை அமைப்பதற்கு வாக்களித்த மக்கள் ஏமாற்றமடைந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.

**கேப்பாபுலவு,...**

விடுவிக்கப்பட்டுள்ளது இது மக்கள் இரவு, பகல் பாராது நடத்திய போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும். வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மக்களின் சொந்த நிலங்கள் விடுவிக்கப்படாமல் இருக்கின்றன. இவை அனைத்தையும் மக்கள் ஒற்றுமையுடன் போராடினால்தான் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். எந்தவொரு காரணத்தினாலும் விமானப்படை அகற்றப்படமாட்டாது என்று தேசம் பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை இறுதியாக கிடைத்த தகவல்.

**சைட்டம் தனியார் பல்கலைக்கழகம்...**

கோஷ்டிக்கும் இடையில் பல தொடர்புகள் இருப்பதை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தை ஆரம்பிக்கும்போது வெளியிட்ட பத்திரிகை விளம்பரத்தில் ரஷ்யாவின் நிஷ்னிநொவ்கொரோத் பல்கலைக்கழகத்துடன் இந்நிறுவனம் கூட்டு சேர்ந்ததான விளம்பரம் மக்களை திசைதிருப்புவதற்கு வெளியிட்ட ஒன்றாகவும் உறுதியாகியுள்ளது. இச்சட்டவிரோத பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவனின் பெற்றோர்கள் நீதிமன்றில் வழக்கு தொடுத்திருந்தனர். இந்நடவடிக்கைக்கு கோபமுற்ற சமீர சேநாரத்தின தனது அடியாட்களை இட்டு அப்பெற்றோரை அச்சுறுத்தி அவ்வழக்கு தொடர்பான ஆவணங்களைய்யும் பறித்துள்ளனர். அவ்வழக்கு விசாரணைகள் இன்னமும் நடந்து கொண்டுள்ளது.

இதேபோன்று சமீர சேனாரத்தின பயணித்த வாகனத்துக்கு துப்பாக்கி சூடு நடத்திய சம்பவம் அண்மையில் அவதானித்தோம். இச்சம்பவத்தில் பிரதான சந்தேக நபரான முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் பாதாள உலகத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவராகும் விசாரணைகளின் பின்பு இந்த பிரதேச சபை உறுப்பினரும் தலைமறைவாகியுள்ளார்.

சமீர சேனாரத்தின வைத்தியராக அறிமுகப்படுத்தியிருந்தாலும், அவர் வைத்தியர் இல்லை என்பதும் உறுதியாகியுள்ளது. அவர் மீது துப்பாக்கி சூடு நடத்தியதாக கூறும் அன்றிரவில் சற்று நேரத்துக்கு முன்பு பாதாள உலக கோஷ்டியுடன் தொடர்புள்ள முன்னாள் பிரதேச சபை உறுப்பினருடன் சமீர சேனாரத்தின தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளதை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

# வேலையற்ற பட்டதாரிகளினால் மாவட்டச் செயலகம் மயானம் ஆக்கப்பட்டது




மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டத்தாரிகள் மாகாண அரசாங்கங்கள் வேலையற்ற பட்டத்தாரிகளுக்கு நியமனம் வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த எட்டு நாட்களாக சத்தியாககிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை வேலையற்ற பட்டதாரிகள் அனைவரின் கவனத்தை ஈர்ப்பதற்காக சவப்பெட்டியை வைத்து ஆர்ப்பாட்டத்தை நடத்தியதுடன் காந்தி பூங்காவிலிருந்து பட்டத்தாரிகள் அதனை சுமந்தவாறு பேரணியாக பிரதான பஸ் நிலையம் ஊடாக, சென். மைக்கல் கல்லூரி, சிசிலியா பெண்கள் பாடசாலை, மத்திய கல்லூரி ஊடாக மட்டக்களப்பு மாவட்டம் செயலகம் வரை சவப் பெட்டியை சுமந்து பேரணியாக சென்றனர்.

மட்டக்களப்பு செயலகத்திற்கு சென்ற பட்டத்தாரிகள் அரசாங்க அதிபரை சந்தித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளிப்பதற்காக காத்திருந்தனர். எனினும் அரசாங்க அதிபர் வருகை தராத காரணத்தினால் பட்டதாரிகள் தமது பட்ட சான்றிதழ்களின் நகலை கிழித்து எரிக்க முற்பட்ட பொழுது, அதனை அங்கிருந்த பொலிஸார் தடுக்க முற்பட்ட வேளையில் இரண்டு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த சம்பவத்தின் போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். கிரிதரன், மட்டக்களப்பு உதவி பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்திரட்ண ஆகியோர் பட்டதாரிகளுடன் கலந்துரையாடி இயல்பு நிலையை ஏற்படுத்தினர்.

ஆனாலும் பட்டத்தாரிகள் சவப்பெட்டியுடன் அங்கு குழுமி இருந்தால் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மயான பூமியைப் போன்ற சூழ்நிலை காணப்பட்டது.

இதன்போது ஒன்றிணைந்த பட்டதாரிகளின் சங்க தேசிய இணைப்பாளர் தென்னோனானந்த தேரர் சிறுகாயங்களுக்கு உள்ளானதாக பட்டதாரிகள் தெரிவித்தனர்.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கையில் ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் பட்டதாரிகளின் பிரச்சினை புரையோடிப் போயுள்ளது. 1ம் தரத்துக்கு சுமார் 3,50,000 பிள்ளைகள் சேர்த்தாலும் பல்கலைக்கழக படிப்பை பெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பது சுமார் 25,000 மாணவ மாணவிகளுக்கு மட்டுமே ஆகும். இவ்வாறு தகுதிபெறும் 25,000 மாணவ மாணவிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு இந்த ஆட்சி முறை தகுதியற்றோராக காணப்படும்போது பல்கலைக்கழக படிப்புக்கு வசதி கிடைக்காத ஏனையோரின் நிலை சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

**மட்டுநகர் ராஜன்**

# சைட்டம் விரோதமானது அதனை மூடி விடுவதே தீர்வு

சைட்டம் சட்ட விரோதமான நிறுவனம் அதனால் சைட்டத்துக்கு பொது தீர்வுக்கு வழங்குவதற்கு இடமில்லை. அதனை மூடிவிடுவதே தீர்வாக இருக்க முடியும் அதுவரைக்கு எமது போராட்டம் தொடரும், சைட்டத்துக்கு எதிராக அனைவரும் எம்மோடு போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

மாலபே தனியார் வைத்திய பீடத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணி கடந்த வியாழக்கிழமை (23-02-2017) கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்ட பேரணியின்போது கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னாள் நடத்திய எதிர்ப்பு கூட்டத்தில் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கா உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

சைட்டம் பிரச்சினைக்கு நியாயம் கிடைக்கும் வகையில் தீர்வு ஒன்றை பெற்று கொடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். சட்டவிரோத நிறுவனத்துக்கு எவ்வாறு நியாயம் பெற்று கொடுக்க முடியும்? அதனால் சைட்டதுக்கு பொது தீர்வு வழங்குவதற்கு இடமில்லை. அதனை மூடி விடுவதே தீர்வாக இருக்க முடியும்.

அத்துடன் சைட்டம் பிரச்சினைக்கு ஆதரவாக அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தனது கொந்தரத்துக்காக சைட்டத்தை பாதுகாக்க செயல்படுகின்றார். அதேபோல அமைச்சர் ராஜித்த சேனாரத்ன தங்கள் சட்டவிரோத செயற்பாட்டுக்கு நீதி மன்றத்தை பயன்படுத்தி உள்ளார். நீதிமன்ற தீர்ப்பை நாங்கள் விமர்சிக்க மாட்டோம். ஆனால் மக்கள் சக்தியை திரட்டி சைட்டத்தை மூடி விடுவோம். சைட்டத்துக்கு எதிராக அனைத்து வைத்திய பீட மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் வீதிக்கு இறங்கியுள்ளனர். அத்துடன் சைட்டம் சம்பந்தமான பிரச்சினைக்கு எதிர்வரும் 7-ம் திகதி ஒரு நாள் விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெற உள்ளது. பாராளுமன்ற விவாதத்திற்கு நாங்கள் தயாராகி விட்டோம் என்றார்.

மக்கள் விடுதலை முன்னணி பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இங்கு உரையாற்றுகையில் சைட்டத்துக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்குவதை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறார். ஆனால் சட்ட விரோத சைட்டத்தை ஆரம்பிக்க அனுமதி வழங்கியவர் மஹிந்த ஆவார்.

அவர் செய்த தவறால்தான் இன்று இந்தளவு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மஹிந்த ராஜபக்ஷ அன்று மாணவர்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கவில்லை. மக்களை அடக்கி தனது அதிகாரத்தை காட்டி வந்தார். "அவரை சிம்மாசனத்தில் இருந்து இறக்வோம்" நாங்கள் கூறினோம். அது இன்று நடைபெற்றுள்ளது.

சட்டவிரோத சைட்டத்தை மூடிவிட்டு மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாக்க வேண்டும். அரசாங்கம் எமது போராட்டத்தை விளையாட்டாக கருதக்கூடாது. அவ்வாறு நினைத்தால் அது அரசாங்கத்தின் இறுதி காலமாகும் என்றார்.

**சதீஸ்**

தேசம் அடுத்த இதழ் 2017 ஏப்ரல் மாதத்தில் எதிர்பாருங்கள்.

தேசம்
உண்மை | நேர்மை | துணிவு

ஆசிரியர் பீடம் : 011 3098249
பெக்ஸ் : 011 2160691
E-mail; : deshamnews@gmail.com
முகவரி : 22/13 1/1, சமன் உயன,
தம்பஹேன வீதி, மஹரகம.

## கேப்பாபுலவு போராட்டம்

நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிராக நாடெங்கும் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் கடந்த பல நாட்களாக தாம் வாழ்ந்த பூர்வீக மண்ணில் குடியேற அனுமதிக்குமாறு கோரி முல்லைத்தீவு கேப்பாப்புலவு மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டம் எந்த வித தீர்வுமின்றி தொடர்கிறது. தமது சொந்த மண்ணில் காலடி எடுத்து வைக்கும் வரையில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் அறிவித்து உள்ளனர்.

இந்த மக்களின் போராட்டத்திற்கு நாடெங்கும் நாளுக்கு நாள் ஆதரவு பெருகி வருகின்றது. மக்களின் போராட்டம் நியாயமானதென்று தென்னிலங்கை மக்களும் உணர தொடங்கிவிட்டார்கள். யுத்தம் முடிவடைந்து 8 ஆண்டுகள் ஆகின்ற போதிலும் யுத்தப்பாதிப்புகளிலிருந்து வடக்கு கிழக்கு மக்கள் முற்றாக மீட்சியடையாத நிலை நிலவி வருகின்றது. படையினராக பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் பெருமளவான பொது மக்களின் காணிகள் படையினரால் சுவீகரிக்கப்பட்டன. நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பின்னர் வலிகாமம் வடக்கு, மற்றும் திருகோணமலை சம்பூர் பகுதிகள் மக்களிடம் திருப்பிக்கையளிக்கப்பட்டன தொடர்ந்து படையினரிடம் இருக்கும் பொது மக்களின் பூர்வீக காணிகள் மீளவும் கையளிக்கப்படும் என அரசாங்கம் உறுதிமொழிகளை வழங்கியிருந்தது ஆனால் அவை தொடர்ந்து நடைபெறுவதாயில்லை.

கேப்பாப்புலவு பகுதியில் விமானப் படையினரிடமுள்ள காணிகளை விடுவிப்பதற்கு அரசாங்கம் அந்த மக்களுக்கு உறுதிமொழி வழங்கியிருந்த போதிலும் படையினர் காணிகளை விடுவிப்பதாக இல்லை. அதனால் அதிருப்தி அடைந்த மக்கள் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி முதல் வெயில் மழை இரவு பகல் என்று பாராது வீதியில் வேதனையுடனும், கண்ணீருடனும் போராட்டத்தை நடத்தி வருகின்றது.


ஆனால் இந்த மக்களின் போராட்டத்திற்குத் தீர்வு காண்பதற்கு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தன் உட்பட தமிழ் அரசியல் வாதிகள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த மக்களின் போராட்டத்தை கேட்டறிந்து இந்த மக்களின் காணிகள் மீளவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றார். ஜனாதிபதியின் இந்தக் கூற்றை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனால் போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த வாக்குறுதிகளை நம்பி போராட்டத்தை கைவிட மக்கள் தயாராக இல்லை. இனியும் ஏமாற முடியாது எனக்கூறி மக்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இதேபோன்று கிளிநொச்சி பரவிபாஞ்ஞான் மக்களின் காணிகளும் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாமல் உள்ளது 27 குடும்பங்களின் காணிகள் தொடர்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். கிளிநொச்சி கந்தசாமி கோயில் அடியில் காணாமல் போனோரின் குடும்பங்கள் அவர்களை தேடித்தரும்படி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வடபகுதியில் நடைபெறும் போராட்டங்களுக்கு நாடெங்கிலும் உள்ள மக்கள் பல இடங்களில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடத்தி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

சொந்த மண்ணுக்காக பூர்வீக காணிகளுக்காக தெருவில் இறங்கிபோராடும் இந்த மக்களின் கோரிக்கைகளை ஜனாதிபதி தனது அதிகாரத்தை கொண்டு உடனடியாக பெற்றுக்கொடுக்க வேண்டும்.

- ஆசிரியர் -



# ஜனநாயகமும் தடுமாறும் அரசாங்கமும்

"உங்களுடைய சுதந்திரத்தை எவ்வளவு பெரிய மனிதனின் காலடியிலும் வைத்துவிட வேண்டாம். அல்லது பெரிய மனிதர்களை நம்பி முழு அதிகாரத்தையும் அவர்களிடம் ஒப்படைத்து விடாதீர்கள்" என்றார் ஒரு அறிஞர்.

நாட்டுக்காக வாழ்நாள் முழுவதிலும் உழைத்த பெரிய மனிதர்களுக்காக நன்றிக்கடன் செலுத்துவதில் தவறில்லை. ஆனால் நன்றி செலுத்துவதற்கும் ஒரு எல்லை உண்டு.

**"எந்தவொரு மனிதனும் தன்னுடைய மானத்தை விலையாகக் கொடுத்து நன்றியுணர்வை காட்ட மாட்டான். எந்தவொரு பெண்ணும் தன்னுடைய நன்றியுணர்வுக்கு கற்பை விலைபேச மாட்டாள். அதேபோன்று, எந்தவொரு தேசமும் தன்னுடைய நன்றியுணர்வுக்கு சுதந்திரத்தை விலையாகத் தராது"**

**- என்றார் டேனியல் ஓ கானெல் -**

"எந்தவொரு மனிதனும் தன்னுடைய மானத்தை விலையாகக் கொடுத்து நன்றியுணர்வை காட்ட மாட்டான். எந்தவொரு பெண்ணும் தன்னுடைய நன்றியுணர்வுக்கு கற்பை விலைபேச மாட்டாள். அதேபோன்று, எந்தவொரு தேசமும் தன்னுடைய நன்றியுணர்வுக்கு சுதந்திரத்தை விலையாகத் தராது" - என்றார் டேனியல் ஓ கானெல் -

ஆம், சுதந்திரம் என்பது உன்னதமானது. புனிதமானது. அந்த ஜனநாயக புனிதத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கு உள்ளது. இலங்கை தொடர்பில் மக்கள் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை மேற்கோள் நிரூபிக்கிறது. கடந்த 69 வருடங்களாக நம் நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு மக்களின் பங்களிப்பென்ன என்பதை ஒவ்வொவரின் மனசாட்சியிடம் கேட்டாக வேண்டும்.

எது எவ்வாறாயினும் இப்போது இலங்கை ஆட்சியாளர்கள் நமது பெண்களின் கற்பெனும் சுதந்திரத்தை காவுகொள்ள தயாராகியுள்ளனர். அதுதான் தற்போது கொண்டுவரப்படவுள்ள புதிய உள்ளூராட்சி தேர்தல் முறையாகும். உள்ளூராட்சி தேர்தல் தொடர்ந்தும் பின்போடப்பட்டு வந்துள்ளது. அதற்கான காரணம் தற்போதைய நல்லாட்சியெனும் ரணில் - மைத்திரியின் கூட்டரசாங்கத்தின் தடுமாற்றமாகும். 2015 ஆகஸ்டில் நடைபெற்றத் தேர்தலில் இதுநாள்வரையில் நாட்டை ஆண்டு வந்த இரண்டு முதலாளித்துவக் கட்சிகளுக்கும் பெரும்பான்மை கிடைக்காததன் காரணமாக உருவானதே கூட்டாச்சி. மக்களின் சுதந்திரத்துக்கு மதிப்பளிப்பதாகக் கூறி ஆட்சிபீடமேறியவர்கள் இன்று சுதந்திரத்தை பறிப்போராக மாறியுள்ளார்கள். அதாவது மக்களுக்கும் வாக்குரிமைக்கு வேட்டுவைத்துள்ளார்கள். தேர்தல்கள் பிற்போடப்படுகின்றன. புதிய தேர்தல் சட்டம் கொண்டுவரப்போவதாக கூறினார்கள். இவைகள் அனைத்தும் ரணில்-மைத்திரி ஆட்சியின் இயலாமையே வெளிகாட்டுகின்றன.

தேர்தல் நடத்தப்பட்டால் அரசாங்கம் தோல்வியடையாது உறுதியான நிலையும் ஸ்ரீ.ல.சு.க இரண்டாக பிளவுபட்டுவிடுமென்றும், ஐ.தே.க. வின் உட்பூசல் மீண்டும் தலைதூக்குமெனவும் ஸ்ரீ.ல.சு.க. பிளவுபட்ட நிலையில் தேர்தலுக்குச் சென்றால் மைத்திரியின் நிலை கவலைக்கிடமானதாக அமைந்துவிடுமென்பதால் தேர்தலை நடத்தி தான் தோல்வியடைந்தால் ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு கிடைத்த 62 இலட்ச மக்கள் ஆணை மண்ணாகிவிடுமென்பதால், தேர்தலை நடத்தாது இழுத்தடிப்பதே மேலானது என மைத்திரி நினைக்கும் நிலையில் தேர்தல் எப்படிவருமென்று மக்கள் நினைக்கும் நிலையில் புதிய தேர்தல் முறையை வர்த்தமாணியில் அறிவிக்க போவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அறிவித்துள்ள வர்த்தமானியில் வெளியிடப்போகும் புதிய தேர்தல் முறை எவ்வகையானது? அது மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுமா? சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் கூடுதல் ஜனநாயகம் நிறைந்துள்ள வாய்ப்பினை அளிக்குமா? என்பது அனைத்தும் வெவ்வேறு கேள்விக்குரியாகவே அமைந்துள்ளது. வர்த்தமானியில் அறிவிக்கப்போகும் உத்தேச தேர்தல் முறை கடந்த காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவினால் கொண்டுவரப்பட்ட தேர்தல் முறையாகும். அது மக்கள் அபிலாசைகளைப் பூர்த்திச் செய்யாத இரண்டு கட்சிகளுக்கு மட்டும் சாதகமான மக்களுக்கும் சிறுபான்மை மக்களும் சிறிய கட்சிகளுக்கும் பாதகமான தேர்தல் முறையாகும். அது மக்களின் ஜன நாயகத்திற்கு பாதகமானதாகும்.

அந்த தேர்தல் முறையே இப்போது அமைவதால் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளது. அது ஜனநாயகத்திற்கு குழிபறிக்கும் தேர்தல் முறையாகும். எனவே மக்கள் இந்த தேர்தல் முறையை எதிர்த்து நிறுத்த வேண்டும்.

தேர்தல் நடத்தப்பட வேண்டும் அதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால் கொண்டுவரவேண்டிய தேர்தல் முறை மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற தேர்தலாக அமைதல் வேண்டும். ஆனால் கொண்டுவரப்படவுள்ள உத்தேச தேர்தல் முறையில் மக்கள் நலனை பிரதிபலிக்கவிலையென்றால் அதில் ஜனநாயகம் மலரப்போவதில்லை அமையும். அதனால் மக்கள் நலன் சார்ந்த தேர்தல் முரறையை கொண்டுவரும்படி அரசாங்கத்தை வலியுத்தவேண்டும் உத்தேச தேர்தல் முறையை நிராகரிக்க வேண்டும். அதற்காக மக்கள் நலன் விரும்பிகள் முற்போக்குவாதிகள், ஜனநாயகத்தை நோக்கும் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இந்திரஜித்

# சட்டங்கள் காலத்திற்கேற்ற வகையில் சீர்திருத்தப்படல் வேண்டும்

## சட்டத்தரணி ஜெருஷா குறோசெட் தம்பையாவின் நேர்காணல்

செல்வி ஜெருஷா குறோசெட் தம்பையா அவர்கள் லண்டன் பல்கலைக்கழகத்தின் நீதித் துறையின் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டத்தினை முடித்து 2011ம் ஆண்டிலிருந்து சட்டத்தரணியாகப் பணிபுரிகின்றார். குறிப்பாகத் தொழிலாளர், குடும்ப சட்டம், பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களைக் கையாளும் இவர், கல்வியின் தரத்தில் அக்கறை கொண்ட சட்ட விரிவுரையாளருமாவார். தென்னாசிய பெண்கள் நிதியத்தின் உறுப்பினரான இவர், பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும், அவர்கள் சட்டத்தினை அணுகுவதில் உள்ள பிரச்சனைகள் தொடர்பாகவும், சட்ட சீர் திருத்தங்களுக்கு ஆலோசனை வழங்குபவராகவும் திகழ்கின்றார்.

**உங்களின் அபிப்பிராயத்தின்படி, வழக்காளிகளின் தேவைகள் பூர்த்தி செய்யக் கூடியனவாக அமைகின்றனவா ?**

இதில் தாமதங்கள் உண்டு. எனினும் அனைத்துச் நீதித் துறைகளின் கீழும் தாமதங்கள் இருக்கின்றன. கணனி மயப்படுத்தாமை, நீதித் துறையின் வினைத்திறனற்ற தன்மை போன்ற விடயங்கள் வழக்காளிகள் முகங்கொடுக்க நேரிடும் பிரச்சனைகளாகும்.
அவர்கள் நீதித்துறையின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டுமென்றால் இக்குறைபாடு களை நிவர்த்தி செய்வதற்கான படிமுறைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**பொதுவான பிரச்சனைகளுக்கு மத்தியில் பெண்களும், சிறுவர்களும் விசேடமாகப் பாதிப்புக்குள்ளாகின்றனரா?**

ஆம். எனினும் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய பல்வேறு ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பொலிஸ் நிலையங்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பிரிவு, சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சிறார்கள் சம்பந்தப்பட்ட தனியான நீதிமன்றம் போன்றவைகள் அதிலடங்கும்.

**இச் சேவைகளை இன்னும் விருத்தி செய்ய எவ்வாறான நடவடிக்கைள் எடுக்க முடியும்?**

நான் நினைக்கிறேன் இப்பிரிவுகளில் உள்ள ஊழியர்களும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் விசேட பயிற்சிகள் வழங்கப்பட வேண்டுமென்று. அத்துடன் அவர்களிடம் குறித்த பிரதேசத்தில் புழக்கத்தில் உள்ள மொழிகளின் திறமையும் அவசியம். அதுமட்டுமல்லாமல் இச்சேவைகளின் ஒரு பகுதியாக உளவியல் நிபுணர்களின் அல்லது ஆலோசகர்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்திற்கு பொலிஸ் நிலையங்களிற்குள்ள அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும்.

**சமீப காலங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வன்புணர்வுகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் அதிகரித்துள்ளனவா ? அல்லது தற்போது தான் அவை வெளிச்சத்திற்கு வருகின்றனவா?**

துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகள் எப்போதும் அதிகமாகவே காணப்படுகின்றன. எனினும் தற்போது ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் விசேடமான பங்களிப்பு இவற்றை வெளிக் கொண்டு வருவதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இதனால் மக்கள் இவ்வாறன சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக எண்ணுகின்றனர்.

> **கிராமப்புறங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் என்பது நிச்சயமாக நடைமுறைப்படுத்த வேண்டியதொன்று. அத்துடன் மூன்று மொழிகளிலும் வழங்கப்படும் அவசரத் தொலைபேசிச் சேவைகள் போன்ற சேவைகள் மிகவும் வினைத்திறன் மிக்கதாக இயக்கப்பட வேண்டும். பாதிப்புக்குள்ளானவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகப் பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் உறைவிடங்கள் அமைக்கப்படல் வேண்டும்.**

**சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தவிர்க்கும் முகமாக என்ன மாதிரியான செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்?**

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான தனியான நீதிமன்றம், துரிதப் படுத்தப்பட்ட வழக்கு விசாரணைகள், காணொளிச் சாட்சியங்களைப் பயன்படுத்தல், விரைவுபடுத்தப்பட்ட துஷ்பிரயோக வழக்கு விசாரணைகள் போன்ற சீர்திருத்தங்கள் தொடர்பான பல்வேறு முன்மொழிவுகளைப் பலர் மேற்கொண்டுள்ளனர். இவை செயற்படுத்தப்படுமாயின் நீதி நிலை நிறுத்தப்படுவது மட்டுமல்லாது, பலர் தமது பிரச்சனைகளை நிதிமன்றத்திற்கு எடுத்து வருவார்கள்.

**தற்போதைய நிலையில் அதிகமாகப் பெண்களால் வழக்குத் தாக்கல் செய்யப்படும் விடயங்கள் எவை?**

குடும்ப வன்முறைகள், குடும்பப் பராமரிப்புக்கள் மற்றும் பாலியல் வன்புணர்வுகள் போன்ற விடயங்களே தற்போது பெண்களால் அதிகமாகத் தாக்கல் செய்யப்படும் வழக்குகளாகக் காணப்படுகின்றது.

**இவ்விடயங்களில் சட்டம் பரந்ததாகக் காணப்படுன்றதா?**

இல்லை. பல்வேறு மகளிர் அமைப்புக்கள் குடும்ப வன்முறைச் சட்டத்தில் பல சீர்திருத்தங்களை முன் மொழிந்திருக்கின்றனர். குற்றம் சுமத்தப்பட்டவரிடம் குறைவான



வெளிப்பாடு போன்ற செயற்பாட்டு ரீதியான மாற்றங்கள் அவற்றுள் அடங்கும். அவை நடைமுறைப் படுத்தப்படும் பட்சத்தில் நிச்சயமாகப் பாதிக்கப்பட்டவருக்கு நன்மை பயக்கக் கூடியதாக அமையும்.

**நாம் கலந்துரையாடிய பிரதான விடயங்களைத் தவிர, வேறு எவ் வகையான இன்னல்களைப் பெண்கள் எதிர் நோக்குகின்றனர்?**

அதிகரித்துவரும் சமூக வலைத்தளப் பாவனைகளுடன் பழிவாங்கும் நோக்குடன் வெளிவிடப்படும் ஆபாசக் காணொளிகள் முக்கிய இடம் பிடிக்கின்றன. இவற்றைக் கையாள்வதற்காகக் திட்டவட்டமான சட்டங்கள் இல்லாத காரணத்தினால், அச் சுமையானது பாதிப்புக்குள்ளானவர் மீதே சுமத்தப்படுகின்றது. இதனால் நீதியை நிலை நாட்டுவதில் அசௌகரிங்கள் ஏற்படுகின்றன. அத்துடன் பாலியல் அச்சுறுத்தல்கள், வீதிகளில் பெண்களின் மீது மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் போன்றவைகள் இளம் பெண்கள் எதிர்நோக்கும் மேலதிக இன்னல்களாகக் காணப்படுகின்றன.

**நீதித் துறைக்கும், பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகவும், எவ்வகையான உதவிகளைச் சட்டத்தரணிகள் மற்றும் சேவை வழங்குனர்களால் மேற்கொள்ள முடியும் ?**

கிராமப்புறங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் என்பது நிச்சயமாக நடைமுறைப்படுத்த வேண்டியதொன்று. அத்துடன் மூன்று மொழிகளிலும் வழங்கப்படும் அவசரத் தொலைபேசிச் சேவைகள் போன்ற சேவைகள் மிகவும் வினைத்திறன் மிக்கதாக இயக்கப்பட வேண்டும். பாதிப்புக்குள்ளானவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகப் பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் உறைவிடங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

**இலங்கையில் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அணுகக் கூடியவாறு நீதித் துறை அமைத்துள்ளதா ?**


இதிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கையின் (CEDAW) 66ம் மாநாட்டில் பிரதிபலிக்கப்பட்டது. அதில் இஸ்லாமிய திருமணச் சட்டத்திலிருந்து, வடக்கு கிழக்கில் உள்ளூர் மொழிகளில் தேர்ச்சியற்ற போலிஸ் உத்தியோகத்தர்களினால் அவசர நிலைகளில் நடமாடும் பிணக்குத் தீர்ப்புக்களில் ஈடுபட முடியாமை போன்ற விடயங்கள் வரை பிரதிபலித்தன. எந்தவொரு தரமான துறையும் பொறுப்புக் கூறக் கூடியதாக இருக்க வேண்டும். அதனால் அத்துறை பல சவால்களை எதிர் கொள்ளும். இதனை பெண்களும் சிறுவர்களும் எதிநோக்கும் பிரச்சனைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருதல் மூலமே ஆக்க பூர்வமாகத் திறக்க முடியும். வெளிச்சத்திற்க்குக் கொண்டு வரும் பிரச்சனைகள் தேவையான பெறுமானத்தில் அணுகப்பட்டால் மாத்திரமே சட்டத்தை தரமான ரீதியில் பதிலை எதிர் பார்க்கக் கூடியதாய் அமையும்.

**நீங்கள் வேறு ஏதேனும் கருத்துக்களை எமது வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறீர்களா?**

பெண்களும் சிறுவர்களும் எப்போதும் ஒன்றாகவே பார்க்கப்படுகின்றமையால், அவர்களின் குறிப்பிட்டதனித்துவமான முக்கியத்துவங்கள் குன்றியதாகவே காணப்படுகின்றன. கலாச்சாரமும், சமூகமும் அவர்களது சிந்தனைகளும் இத் துறையில் தாக்கம் செலுத்துகின்றன. ஆகவே நிகழ்வுகளை வெளிக்கொணர்வது மக்களின் கடமையாகும். சமூகத் தொண்டுகளை மேற்கொள்வதுடன், மாற்றத்தை நிர்ப்பந்தியுங்கள்.

-ரஞ்ஜிதன்-

# தமிழ் அரசியல் தலைவர்களைவிட சக்தி வாய்ந்த அதிகாரிகள்



**நிதித் தொடர்பான மோசடிகளில் ஈடுபடுவதற்காகவே வர்த்தக நிறுவனங்களை நடத்திச் செல்கிறார்கள். இவர்களுடைய செயற்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றுவது ஆர். பாஸ்கரலிங்கம் மற்றும் அர்ஜூன் மகேந்திரன் போன்றோர் ஆகும். அவர்களை பாதுகாப்பது கலாநிதி இந்திரஜித் குமாரசாமி போன்றோரின் கடமையாகும்.**

எமது நாட்டில் அரச நிறுவனங்கள் பற்றி கதைக்கும்போது அவற்றில் சில தமிழ் நபர்களின் பெயர்கள் அடிபடுகின்றது. அவை ஆர். பாஸ்கரலிங்கம், அர்ஜூன் மகேந்திரன், இந்திரஜித் குமாரசாமி, திரு நடேசன், அர்ஜூன் அலோசியஸ் போன்று நீண்டுக்கொண்டே செல்கின்றது. நாம் எழுதும் இக்கட்டுரைக்கு இப்பெயர்கள் மட்டும் போதும் என்று நினைக்கிறோம். குறிப்பாக அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புள்ள நபர்கள் குறித்தே எமது கவனம் திரும்புகின்றது.

இவர்களைப் பற்றி நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம். ஆர். பாஸ்கரலிங்கம் அவர்கள் ஐக்கிய தேசிய் கட்சி ஆட்சி காலப்பகுதியில் பொருளாதார ஆலோசகர் மற்றும் நிதித்துறை ஆலோசகராக அளப்பறிய பங்கை ஆற்றிய ஒருவராவார். பொருளாதாரம் மற்றும் நிதி ஆகிய துறைகள் இரண்டு பிரிவுகளாக எடுத்துக் கொண்டாலும் இவை இரண்டுக்கிடையில் பல வித்தியாசங்கள் காணப்படுகின்றது. பொருளாதாரத் துறையில் முக்கியமான பங்கை நிதித்துறை ஆற்றுகின்றது. இவை இரண்டும் ஒரு நாட்டுக்கு இன்றியமையாதத் துறைகள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஒரு நாடு அபிவிருத்தியின் திசைக்கு செல்கின்றதா? பின்நோக்கி செல்கின்றதா? ஒரே இடத்தில் தேங்கி நிற்கின்றதா? என்பதை பொருளாதாரத்துறையே தீர்மானிக்கின்றது.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியின் கீழ் லிபரல்வாத பொருளாதாரத்தை கொண்டு செல்வதற்காக ஆலோசனை வழங்குவதில் ஆர். பாஸ்கரலிங்கம் முதன்மையானவராவார். இதில் 2002 பொதுத் தேர்தலுக்குப் பின்பு புதியதொருவரின் பெயர் மேடையேறியது. அவர் நாட்டின் பிரபல்யமாகக் கதைத்துவரும் அர்ஜூன் மகேந்திரன் ஆகும். அவர் பெரும் வர்த்தகர் என்று கூறப்படுகின்றார். இலங்கையில் இருந்தல்ல சிங்கப்பூரில் இருந்தே வர்த்தகர்களை இயக்கி வருகின்றார். இவர் சிங்கப்பூரில் பிரஜாவுரிமை பெற்றவராவார்.

2002ம் ஆண்டு இறுதியில் நடத்திய பொதுத்தேர்தலில் பதவியேற்ற ஐ.தே.க. அரசாங்கத்தில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றாலும் நிறைவேற்று ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்கா இருந்தார். அவ்வாறிருந்தும் நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரத்தை கூட துச்சமாகக் கருதிய பிரதமரும் அமைச்சரவையுமே காணப்பட்டது. பாஸ்கரலிங்கம் ஆலோசகராக நியமித்ததோடு அர்ஜூன் மகேந்திரனை சிங்கப்பூரிலிருந்து வரவழைத்து முதலீட்டு சபையின் (BOI) தலைவராக நியமிக்கப்பட்டார். அதன்பின் 2004ம் ஆண்டு நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில் ஐ.தே.க. தோல்வியடைந்ததால் ஆர். பாஸ்கரலிங்கம் செயலிழந்தார், அர்ஜூன் மகேந்திரன் மீண்டும் சிங்கப்பூருக்குச் சென்றார். அதன்பின் பல வருடங்களுக்குப் பின்பு 2015 ஜனவரி 08ம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்பு ஐ.தே.க. ஸ்ரீ.ல.க.சு கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டது. மீண்டும் அர்ஜூன் மகேந்திரனை இலங்கைக்கு வரவழைத்து இம்முறை கடந்த தடவையில் வழங்கிய பதவியைவிட பொறுப்பு வாய்ந்த மத்திய வங்கி ஆளுநராக அவர் நியமிக்கப்பட்டார். இப்பதவியை வகித்து மூன்று வாரங்கள் கடப்பதற்கு முன்பு பிணைமுறி கொடுக்கல் வாங்களில் பாரியளவு நிதி மோசடியில் ஈடுபட்டார். அதனால் அவர் மத்திய வங்கி ஆளுநரை விட பிரபல்யம் வாய்ந்ததொரு நபராகினார்.

இக்கொடுக்கல் வாங்களில் பல கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டது. இதில் நீண்டநாள் நட்டத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களாகும். ஆனாலும் இவரை மத்திய வங்கி ஆளுநர் பதவியிலிருந்து நீக்க முடியாமற் போனது. பதவிக் காலம் முடிவடைந்த பின்பே பதவியை விட்டு அகன்றார். அதன்பின்பும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமியாகும். இவரும் ஒரு தமிழராவார். இவரது விசேடத் தன்மை என்னவென்றால், பழைய ஊழல், மோசடிகளைப் பற்றி எதையும் பேசாமலும் விசாரணைகள் நடத்தாமலும் இருப்பதாகும். அர்ஜூன் மகேந்திரனின் தனிப்பட்ட தேவைகளுக்காக மத்திய வங்கி நிதியிலிருந்து ஆறு கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை பயன்படுத்தியுள்ளதாக உள்ளக கணக்காய்வினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று அர்ஜூன் மகேந்திரனின் மருமகனின் பார்பசுவெல் டிசெரீஸ் நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத்தை பிணைமுறி மோசடிக்காக பயன்படுத்தியதால் 1200 கோடி ரூபாவை நட்டப்படுத்தியுள்ளார் எனவும் கணக்காய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம்மோசடிகள் தொடர்பாக எவ்வித முடிவும் மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி எடுக்கவில்லை. இவை தொடர்பாக மௌனத்தை கடைபிடிக்க வேண்டும் என்று அரசாங்கத்தால் அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதா என்பது தெரியாது.

மேலே குறிப்பிட்ட திரு நடேசன் மற்றும் அர்ஜூன் அலோசியஸ் தொடர்பாக இச்சமயத்தில் பரவலாகக் கதைப்பதற்கு எதிர்பார்க்க மாட்டோம். என்றாலும் இவர்கள் நிதித் தொடர்பான மோசடிகளில் ஈடுபடுவதற்காகவே வர்த்தக நிறுவனங்களை நடத்திச் செல்கிறார்கள். இவர்களுடைய செயற்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றுவது ஆர். பாஸ்கரலிங்கம் மற்றும் அர்ஜூன் மகேந்திரன் போன்றோர் ஆகும். அவர்களை பாதுகாப்பது கலாநிதி இந்திரஜித் குமாரசாமி போன்றோரின் கடமையாகும். எமது நாட்டில் அரசியற் துறையை எடுத்துக் கொண்டால் தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளை மக்கள் நன்கு உணருகின்றார்கள். வரலாற்றில் மற்றும் இன்றும் தமிழ் தலைவர்களாக கருதப்படுகிறவர்கள் என்ன செய்கிறார்கள், என்ன சொல்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் நாட்டில் அதிகாரத் துறையில் உள்ளோர் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதை அவ்வாறு உணர முடிவதில்லை. இவர்கள் இந்த வங்குரோத்தடைந்த பொருளாதாரத்துறையையும், அரசியல் முறையையும் முன்னுக்கு இழுத்துச் செல்வதற்காக அலப்பறிய சேவையை ஆற்றுகின்றார்கள். சுருங்கக்கூறின் இந்நாட்டு சாதாரண மக்கள் படும் கஷ்டங்களில் பெரும்பாலானவற்றுக்கு இந்த அதிகாரிகள் பொறுப்பு கூறவேண்டும்.

**-சந்திரமோகன்-**



# சுமந்திரனின் கொலை முயற்சியின் இரகசியம் என்ன?

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் M.A. சுமந்திரன் அவர்களது கொலை முயற்சி குறித்த செய்திகள் அரசாங்கத்தால் திட்டமிட்டு வருக்கப் பட்டவை என்பது தெரியவருகிறது. இச்சம்பவம் குறித்து கைதுசெய்யப்பட்ட புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் 5 பேர் இன்னமும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். ஒருசில சிங்களப் பத்திரிகைகள் மட்டுமே இச்சம்பவம் குறித்து பிரசுரித்திருந்தது. சிங்கள இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் காய்நகர்த்தலில் ஈடுபட்டு வரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வும் அவ்வளவாக இச்சம்வத்தை சுட்டிக்காட்டுவதை நாம் அவதானிக்கவில்லை.

அப்படியென்றால் பாராளுமன்ற உறுப்பினர் M.A. சுமந்திரனை கொலை செய்வதற்கு திட்டமிடப்பட்டது என்ற செய்தியின் உண்மை நிலை என்ன? இதுவரை அதனை சரிவர கண்டுபிடிக்கப்பட வில்லை. என்றாலும் பாராளுமன்ற சபாநாயகரின் விசேட ஆணைக்கு இணங்க M.A. சுமந்திரனின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வேறு எந்தத் தமிழ் தலைவரையும் விட பலத்த பாதுகாப்பு இப்போது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கொலை முயற்சி சம்பவத்திலுள்ள அரசியல் பின்னணியை பிரதமர் ரணிலும், ஜனாதிபதி மைத்திரிபாலவும் நன்கு அறிந்துள்ளார்கள்.

### கடற்படை தளபதியின் நாடகம்

இக்கொலை முயற்சி குறித்து முதன்முதலில் பல தகவல்களை திரட்டிக் கொண்டது கடற்படை என்று கூறப்பட்டது. முதன்முதலில் திருகோணமலை கடற்படை முகாமில் தகவல்களை சமர்பித்த நபரிடம் அறிக்கைகளை பெற்றுக்கொண்டு அதன் பின்னர் பயங்கரவாத தடுப்பு விசேட பொலிஸ் பிரிவிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக இவ்வறிக்கைகளை சமர்பித்ததாக செய்திகள் அறிவித்தது. அம்பாந்தோட்டையில் ஊடகவியலாளர்களை தாக்கிய கடற்படை தளபதி ஜானக்க விஜேவர்தன மீண்டும் சேவையை நீடித்துக் கொள்வதற்காக திட்டமிட்ட சூழ்ச்சியே இக்கொலை முயற்சித் திட்டம் என்பது மிகவும் தெளிவாக காண முடிகிறது. எனவே ஊடகவியலாளர்களை தாக்கிய கடற்படை தளபதி அதன்பின் M.A. சுமந்திரனின் கொலை முயற்சி வதந்தியை பரப்பி வந்தார் என்பது நாடறிந்த உண்மையாகும்.



### விக்னேஸ்வரனின் இந்திய உறவு

வடமாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரனின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக தமிழ் அரசியல்வாதிகளுக்கிடையில் பல்வேறு வாதவிவாதங்கள் நடைபெற்று வருகின்றது. குறிப்பாக வடபகுதி தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பதிலாக இந்தியாவுடன் வேறு வகையான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு செயற்பட்டு வருகிறார் என்பதே இதற்கு அடிப்படையாகும். இந்தியாவுடன் பல்வேறு கடன் ஒப்பந்தங்களில் மத்திய அரசு அடிபணிந்து வருகின்ற அதேவேளை, கூட்டு வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முதலமைச்சர் முனைப்புடன் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அரசாங்கத்தினதும் வடமாகாண சபை முதலமைச்சரினதும் இந்நடவடிக்கைகள் காரணமாக வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதார நிலை இன்னும் கவலைக்குரிய நிலைக்கு தள்ளப்படும் என புத்திஜீவிகள், கல்விமான்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர். யுத்தம் முடிவடைந்து 8 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையிலும் இப்பகுதி மக்களின் வீட்டுப்பிரச்சினையை தீர்ப்பதற்குக் கூட அருகதை இல்லாத முதலமைச்சர் இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவது தனிப்பட்ட ரீதியில் அவரது நலன்களுக்காகவே என வடமாகாண சபை வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றது.

### கருணா அம்மான் மகிந்த அணியில்

கடந்த மாதம் நடுப்பகுதியில் கருணா அம்மான் தொடர்பான செய்திகளை அவதானித்தோம். கருணா அம்மான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகுவதாகவும் புதிய கட்சியொன்றை அமைப்பதாகவும் அச்செய்திகளில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இவை தொடர்பாக அரசியல் அவதானிப்பாளர்கள் கவனம் செலுத்தியிருந்தனர். அவர் அரசியல் கட்சியொன்று அமைப்பதில் எவ்வித பிரச்சினையுமில்லை. அவ்வாறு அமைக்கும் கட்சியின் செயற்பாடுகள் கிழக்கு மாகாணத்துக்கும் மட்டும் வரையறுக்கப்படும் என அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் முக்கியமான விடயம் இதுவல்ல. கருணா அம்மான் புதியதொரு கட்சியை அமைப்பது மகிந்த ராஜபக்ஷவின் தேவைக்கு இணங்கவே என சிங்கள மொழியில் வெளிவரும் மாற்றுப் பத்திரிகைகள் அறிவித்திருந்தது. இனவாதப் போக்குகள் காரணமாக மகிந்த ராஜபக்ஷவை வெறுக்கும் கிழக்குவாழ் தமிழ் மக்களின் வாக்குகளை சூறையாடுவதற்கே கருணா அம்மான் இவ்வாறு செயற்படுகிறார் என்பது நாடறிந்த உண்மையாகும்.




### மைத்திரியின் உயர் நீதிமன்றத்துக்கான நியமிப்புகள்

கருணா அம்மான் கிழக்கு மாகாணத்தில் தனியான கட்சியை அமைப்பதற்கு செயற்படும் போது ஜனாதிபதி மைத்திரிபாலவும் தனது கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகிறார். மட்டக்களப்பில் வக்கீல் தொழிலில் ஈடுபட்டு வந்த இராமநாதன் கண்ணனை உயர் நீதிமன்ற நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். நல்லாட்சியை அமைப்பதாக வாக்குறுதியளித்து பதவியேற்ற ஜனாதிபதி மைத்திரிபால தாண்தோன்றித் தனமாகவே இவ்வாறு இந்நியமிபை நடத்தியுள்ளார் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனத்தை தெரிவித்துள்ளனர். ஆனால் இது இலங்கை சட்டத் தரணிகள் சங்கத்தின் ஆலோசனைக்கு இணங்கவே நியமித்தார் என ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தாலும், இது பெரும் அநீதியான செயல் என சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்று வெளியிட்டுள்ளனர். இச்சூழலில் சட்டத்தரணிகள் சங்கத்தின் உள்முரண்பாடுகள் உக்கிரமடைந்துள்ளது. இதன் காரணமாக இச்சங்கத்தின் செயற்பாட்டாளர்களை தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பும் பிற்போடப்பட்டுள்ளது.



### தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றும் நல்லாட்சி

ஜனாதிபதி மைத்திரிபாலவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் போன்று தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றுவதற்கு பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருவதை இப்போது அவதானிக்க முடிகின்றது. உயர் நீதிமன்ற நீதவானாக நியமித்த இராமநாதன் கண்ணன் அவர்கள் மலையக மக்கள் சார்பாக நியமிக்கப்பட்ட முதன்முதல் உயர் நீதிமன்ற நீதவான் என சுட்டிக்காட்டினார். ஆனால் அவர் சட்டத்தரணியாக மட்டக்களப்பிலேயே செயலாற்றி வந்தார். எனவே கிழக்கு மாகாணத்தையும், மலையகத்தையும் தமது அரசியல் சார்பாக ஈர்த்துக்கொள்ளும் தோல்வியான செயற்பாடே இது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள சூழலில் அதிலிருந்து மீட்டெடுப்பதற்கு முயற்சிப்பதை விட்டுவிட்டு நாட்டின் சிங்கள மக்களை ஒருபுறம் ஏமாற்றுவதைப் போன்று இவ்வாறான நியமிப்புகள் ஊடாக தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றுவதற்கு ரணில்-மைத்திரி கூட்டரசாங்கம் முயற்சித்து வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.



# மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சியின் படிப்பினைகள்




அக்டோபர் புரட்சிக்குப் பிறகான பாதை யாராலும் அறியப்படாத ஒன்றாக இருந்தது. சோசலிசத்தை எந்த ஒரு உலக நாடும் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்க வில்லை. ஆயினும் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களிடையில் அது ஒரு கனவாக, நம்பிக்கையாக, எதிர்பார்ப்பாக, ஒரு புதிய செய்தியாகப் பரவத் தொடங்கியது. ஜார் ஆட்சியின் வீழ்ச்சி, சமத்துவம், பொது உடைமை, உழைப்பாளிகளின் ஆட்சி, சுரண்டலற்ற சமூகம், அடக்குமுறை அற்ற சமூகம் போன்ற செய்திகள் பரவத் தொடங்கின. பண்பாட்டு நினைவுகளிலும் சமய நம்பிக்கைகளிலும் ஒளிந்த கிடந்த ஏக்கங்கள் இப்போது உண்மையாகப் போகின்றன, என உலகெங்கும் உள்ள கவிஞர்களும் சிந்தனையாளர்களும் அந்நாட்டை ஆர் வத்துடன் உற்று நோக்கினர்.

எமது சோசலிசம் விஞ்ஞான பூர்வமானது என்று மார்க்சிய அறிஞர்கள் கூறுவதுண்டு. ஆயின் அதன் விஞ்ஞான பூர்வமான ஆற்றலைவிட அதன் கற்பனாபூர்வமான ஆற்றல், உணர்ச்சிபூர்வமான ஆற்றல் மிகப் பிரம்மாண்டமானது. சோசலிசம் குறித்த கனவுகள் எல்லா மக்களிடையிலும் எல்லா மொழிகளிலும் எல்லா இலக்கியங்களிலும் உண்டு. இந்த உலகம் நிலையற்றது, பொய்யானது, பிறிதோர் உலகுக்குச் செல்லுவோம், துக்கமே எதார்த்தமல்ல, துக்க நிவாரணம் சாத்தியமே என்பது போன்ற சொல்லாடல்கள் தற்செயலானவை அல்ல. சோசலிசம் பற்றிய கனவுகளுக்குள் மானுட சமூகத்தின் மிகப் பழமையான நீதி, நியாயம் குறித்த ஏக்கங்கள் மறைந்து கிடக்கின்றன. அந்த மிகப் பழைய நினைவுகளைத் தொட்டு எடுத்து மார்க்ஸ் மீட்டிக் காட்டினார். அவை வெறும் கனவுகளல்ல, அவை சாத்தியமே என்று அவர் கூறினார். அதுவே அவரது மகத்துவம்.

### ரஷ்ய சோசலிசமும் மேற்கு உலகும்

மேற்கு உலகு என்பது பெரும்பாலும் முதலாளிய நாடுகளைக் கொண்ட உலகு. அக்டோபர் புரட்சி மிக முக்கியமாக மேற்கு நாடுகளைத்தான் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் சோசலிசப் புரட்சி அடுத்து உடனடியாக மேற்கு நாடுகளில்தான் நிகழும் என்று மார்க்சியரும் மார்க்சியர் அல்லாதோரும் எளிதில் கணக்கிட்டனர். ஆம், அதுதான் எங்கள் திட்டம், என்று கம்யூனிஸ்டுகளும் வெளிப்படையாக அறிவித்தார்கள். சோசலிசம் முதலாளியத்திற்கு மாற்று என்ற கருத்து மேற்கு நாடுகளை அச்சுறுத்தியது. அந்த மாற்று ஏற்பாடு மிகப்பெரிய ஒரு கோட்பாட்டுப் பின்புலத்துடனும் அதைவிடப் பெரிய வெகுமக்களின் அரசியல் செயல் பாட்டுடனும் இணைத்து முன்வைக்கப்பட்டது. "அவர்கள் ஆயுதம் ஏந்தவும் தயாராக உள்ளார்கள" என்ற செய்தி முதலாளிகளைத் தூக்கமில்லாமல் ஆக்கியது.

1930களில் மேற்கு நாடுகளில் கடுமையான பொருளாதார நெருக்கடி, அடுத்த ஆண்டுகளில் பாசிசத்தின் எழுச்சி, இரண்டாம் உலகப் போர், கிழக்கு ஐரோப்பாவில் சோசலிசம், சீனாவில் சோசலிசப் புரட்சி போன்ற சம்பவத் தொடர்ச்சிகளால் மேற்கு நாடுகள் அலறத் தொடங்கின. இப்படியே நெருக்கடியும் போருமாகத் தொடருமெனில் உலகமெங்கும் சோசலிசம் வருவது நிச்சயம் என்பதை அதன் எதிரிகள் நன்கு புரிந்து கொண்டனர். அந்தோனியோ கிராம்சி ஒருமுறை குறிப்பிட்டார்: புரட்சியை அதற்கு உரியவர்கள் புரிந்து கொள்ளுவதை விட அதன் எதிராளிகள் வேகமாகவும் சரியாகவும் புரிந்து கொள்ளுகிறார்கள். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான ஆண்டுகளில் மேற்கு நாடுகளின் வேலைத் திட்டங்களில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டன. மேலை நாடுகளில் தொழிலாளர் எழுச்சிகள் உருவாகாமலிருக்க சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தொழிலாளர் சட்டங்கள், பாதுகாப்புகள், மனித உரிமைகள், மக்கள் நலப் பொருளாதாரம் என்ற திசைகளில் மேற்கு நாடுகள் வேலை செய்தன.

மேற்குலகின் முதலாளியம் சோசலிசத்திற்கு எதிராக சனநாயகம், மனித உரிமைகள் என்பது போன்ற நடைமுறைகளை முன்நிறுத்தியது. முதலாளியம் சோசலிச அமைப்பை நுகர்வுப் பொருளாதாரம், தொழில்நுட்பப் புரட்சி, அணு ஆயுத உற்பத்தி ஆகிய போட்டிகளுக்குள் உள்ளிழுத்தது. அந்தப் போட்டிகளினின்றும் சோசலிசத்தால் தப்பிக்க முடியவில்லை. போட்டியின் இயங்கியல் எதிராளிகளை ஒருபடித்தானவர்களாக மாற்றியது. சோசலிசத்தின் சொந்த இலக்குகள் தவறத் தொடங்கின. சோவியத் மக்கள் கட்சியோடும் அரசாங்கத்தோடும் ஒன்றுபட்டு நின்றவரையில் அரசின் பொருளாதார இலக்குகளைச் சாதிக்க முடிந்தது. ஆயின் பார்வைகள் வேறுபட்டபோது, இலக்குகளை எட்ட அதிகாரவர்க்கத்தின் பலத்தை நம்பவேண்டிவந்தது.

இரண்டாம் உலகப் போருக்கு அடுத்து வந்த காலத்திலேயே, சோசலிச அமைப்பில் சில அடிப் படையான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டும். புதிய சூழல்கள் கண்டறியப்பட்டு பொருத்தமான மாற்றுத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த வாய்ப்புகள் மிகக் கொடூரமாகத் தவறவிடப்பட்டன. மிகயில் கர்பச்சேவ் அதே பிரச்சினைகளை மீண்டும் கையிலெடுத்தபோது, அவர் தாமதமாகிப் போனார். கட்சியால் பிரச்சினைகளையும் மக் களையும் கட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியவில்லை. எத்தனை படைவரிசைகள், அணு ஆயுதங்கள் இருந்த போதும் - மக்கள் ஆதரவும் சரியான தலைமையும் இல்லாது போனபோது - சோசலிசத்தைக் காப்பாற்ற முடியவில்லை!

### சோசலிசமும் மூன்றாம் உலக நாடுகளும்

1917ல் ஐரோப்பாவிலேயே மிகவும் பின்தங்கிய நாடாக ரஷ்யா இருந்தது. அது முழுக்க ஓர் ஐரோப்பிய நாடு என்று கூட சொல்லிவிட முடியாது. ரஷ்ய உளவியல் ஏராளமாக கீழை நாட்டு மாந்தர்களின் பண்புகளைக் கொண்டிருந்தது. ரஷ்ய கிறித்தவம் கத்தோலிக்கமும் அல்ல, சீர்திருத்த கிறித்தவமும் அல்ல. பழைமைவாத கிறித்தவம் என அது அழைக்கப்பட்டது. கத்தோலிக்கக் கிறித்தவம் ரோமாபுரி ஆட்சியாளர்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டது, சீர்திருத்த கிறித்தவம் நவீன ஐரோப்பிய முதலாளியத்துடன் சமரசம் செய்துகொண்டது, பழமைவாத ரஷ்ய கிறித்தவம் மட்டுமே பூர்வீக கிறித்தவத்தின் தூய்மையை இன்னும் தன்னில் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது என்று தஸ்தயேவ்ஸ்கி எழுதுவார். இத்தனை பழமைத் தன்மை கொண்ட ரஷ்யாவில் சோசலிசப் புரட்சி சாத்தியமில்லை எனப் பல சோசலிஸ்டுகளே கருதினர். மேற்கு நாடுகளின் சோசலிஸ்டுகளில் சிலர் ரஷ்யர்களைத் தமது ஐரோப்பிய மையவாத பார்வையோடு நோக்கினார்கள் என்று லெனின் வருந்திய சந்தர்ப்பங்கள் உண்டு. இத்தகைய சூழல்களை எதிர்கொள்ளவே லெனின், ஏகாதிபத்தியத்தின் பலவீனமான கண்ணியில் நிகழ்ந்த புரட்சி இது என்று சித்தரிப்பார்.

அந்தோனியோ கிராம்சி ரஷ்யப் புரட்சியைப் பற்றி எழுதியபோது, அது மார்க்சின் "மூலதனம்" நூலுக்கு எதிராக நடந்த புரட்சி என்றார். ரஷ்யா, முதலாளியத்தின் வளர்ச்சியடைந்த புள்ளி அல்ல, பலவீனமான புள்ளி அது என்பதையே அவரும் குறிப்பிட்டார். 80 சதவீதத்திற்கும் அதிகமாக விவசாயி களைக் கொண்ட நாட்டில் நடந்த புரட்சி அது என்பதை அனைவரும் ஒத்துக்கொண்டனர். நூற்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் அன்றைய ரஷ்ய நாட்டின் எல்லைகளுக்குள் வாழ்ந்தன. ஜார் மன்னரின் ஆட்சி என்பது பல தேசிய இனங்களின் சிறைக்கூடம் என்று லெனின் எழுதினார். அக்டோபர் புரட்சி அடிமைப் பட்டுக் கிடக்கும் தேசிய இனங்களை விடுதலை செய்யும் என்று புரட்சியின் போது லெனின் அறிவித்தார். 1917 டிசம்பர் 31 ஆம் நாளில் பின்லாந்து நாடு ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்றது.

லெனின் ஆசிய மக்களின் மிகப்பெரிய ஆதரவாளராக இருந்தார். ஆசிய தேசிய இனங்கள் எழுச்சி அடைவதை லெனின் பெரிதும் எதிர்நோக்கினார். சர்வதேச அரசியலில் ஆசிய தேசிய இனங்கள் ஒரு மிகப் பெரும் இடத்தை வகிக்கமுடியும் என்பதை லெனின் அறிந்திருந்தார். லெனினது இரண்டு கருத்தாக்கங்கள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் அரசியல் நிலைப்பாடுகளுக்கு பெரிதும் உதவின. ஒன்று, ஏகாதிபத்தியம் என்ற கருத்தாக்கம். மற்றது, தேசிய விடுதலை இயக்கங்கள் என்ற கருத்தாக்கம். முந்தியது உலக முதலாளியத்தின் உருவாக்கத்திலும் நிலைகொள்ளலிலும் காலனிய நாடுகள் வகிக்கும் இடம் பற்றியது. இரண்டாவது, ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியில் தேசிய விடுதலை இயக்கங்களின் பாத்திரம் குறித்தது. இரண்டாவது கருத்தாக்கத்தில் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை என்ற கருத்தும் இடம்பெறும்.

உலக முதலாளியத்தை ஐரோப்பிய தொழிலாளர் வர்க்கம் தனியாக நின்று வீழ்த்திவிடமுடியாது என்பதில் லெனின் உறுதியாக இருந்தார். தேசிய விடுதலைச் சக் ஷதிகள் உலக முதலாளியத்தைக் கடுமையாகப் பல வீனப்படுத்தும் என அவர் எதிர்பார்த்தார். எனவே தேசிய விடுதலை இயக்கங்களின் சுயாதீனமான ஆற்றலை லெனின் பெரிதும் நம்பினார். சர்வதேச அரசியலில் லெனினின் வேலைத்திட்டம் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தியிருக்க முடியும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தேசிய விடுதலைச் சக்திகளின் ஆற்றல் சோசலிச முகாமால் போதுமான அளவு அங்கீகரிக்கப்படவில்லை. தேசிய விடுதலை சக்திகள் பற்றிய லெனினது பார்வை புறந்தள்ளப்பட்டது. அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் ஆகியவற்றுக்கு இடையிலான நெருக்கடி யுத்தத்தில் சோவியத் முகாமிற்கு ஆதரவளிப்பது மட்டுமே விடுதலை பெற்ற நாடுகளின் வேலை என்பது போலக் கருதப்பட்டது. மூன்றாம் உலக நாடுகள் சோசலிசத்தின் தொங்கு சதையாக விளங்கவேண்டும் என்று எதிர் பார்க்கப்பட்டது. மூன்றாம் உலக நாடுகளின் சொந்தப் பிரச்சினைகள் அவற்றுக்கே உரிய தனித்த பண்புகளுடன் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பேசப்படவில்லை.

### சில முடிவுகள்

மாபெரும் அக்டோபர் புரட்சியின் வெற்றிகளிலிருந்து எவ்வாறு மார்க்சிய கோட்பாட்டு உருவாக்க ம் செய்யப்படுகிறதோ, அது போலவே சோசலிசத்தின் தோல் ஷவிகளிலிருந்தும் கோட்பாட்டு உருவாக்கம் நிகழ்த்தப்பட வேண்டும். அக்டோபர் புரட்சியின் பல வரலாறுகள் எழுதப்பட்டால்தான் அது தொடர்பான விரிவான விவாதங்களிலிருந்து அது செய்யப்படமுடியும். மார்க்சியத்தின் தோற்றம் பற்றி ஒரு மார்க்சியர் சொல்லும்போது, அது கீழிருந்து உருவாக்கப்பட்ட ஒரு கோட்பாடு என்பார். அதாவது மார்க்சியத்தின் அடிப்படைப்பண்பே அதன் சனநாயகம் என்பார் அவர். சோசலிசப் புரட்சியை மக்களே அவர்களது விரிந்த பங்கேற்பால், சனநாயகபூர்வமான செயல்பாடுகளால் நிகழ்த்த வேண்டும் என்பார் அவர். மார்க்சியத்திற்கு முன்பே சோசலிசம் என்ற இலக்கு அறியப்பட்டிருந்த போதிலும், அது ஒரு சனநாயக வேலைத்திட்டத்தை எட்டியபோதே மார்க்சியமாகியது. அக்டோபர் புரட்சியின் அனுபவங்கள் மிகப் பிரும்மாண்ட மானவை. அதன் வெற்றிகள் மட்டுமல்ல, தோல்விகளும் மிக விரிவாகப் பயிலப்படவேண்டும். தோல்விகளி லிருந்து படிப்பினைகள் எடுத்துக் கொள்ளப்படும்வரை, அவை புரட்சிகளின் முடிவைக் குறிக்காது. தொடர்ந்து செல்லுவதற்கான திசைவழிகளையே குறிக்கும்.

**ரமேஸ்**



# திரையரங்குகளின் ஆதரவு தேவை

**2013ம் ஆண்டு அகிலனின் இயக்கத்தில் வெளியான THE GAME என்ற குறும்படத்தின் மூலம் அறிமுகமாகி, இதுவரை 11 குறும் படங்களிலும், 3 பாடல்களிலும் நடித்து, ஒரு பாடல் மற்றும் 1 குறும்படத்தை இயக்கிய, வளர்ந்து வரும் நம் நாட்டின் திரைத்துறைக் கலைஞன் விஷ்ணுவர்த்தனுடன் ஓர் சந்திப்பு ..**

**தேசம்** : விஷ்ணு அவர்களே, உங்களுக்கு இத் துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது ?

**விஷ்ணு** : தொலைக்காட்சியில் பாடல்கள் ஒளிபரப்பப்படும் போது அதற்கமைய நடனங்கள் ஆடுவது எனது பொழுது போக்காக இருந்தது. இதன் மூலமே எனக்கு திரைத் துறையில் ஆர்வம் ஏற்பட்டது. நடிப்பு, இயக்கம் ஆகியவற்றில் ஆர்வம் கொண்ட நான், அகிலனின் இயக்கத்தில் வெளியான த கேம் (THE GAME) என்ற குறும்படத்தின் மூலம் அறிமுகமானேன்.

**தேசம்** : இதுவரையில் மக்கள் மத்தியிலான உங்களுக்குக் கிடைத்த வரவேற்பு எத்தகையது ?

**விஷ்ணு** : நாம் எதிர்பார்த்ததனை விட எமக்கான வரவேற்பு அதிகமாகக் காணப் படுகின்றது. எமது குறுந் திரைப்படங்கள் Jaffna Film Festival, Vel's Awards போன்ற விழாக்களில் திரையிடப்பட்டன. E-WASTE நிகழ்விலும் எமக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**தேசம்.** : இந்தியத் திரைப்படத் துறையின் ஆதிக்கம் நிறைந்து விளங்கும் இச் சமுதாயத்தில் உங்களுக்கு அவர்களுடன் சரி நிகராகப் போட்டி போட முடியும் என்ற நம்பிக்கையுண்டா ?

**விஷ்ணு** : நிச்சயமாக. அவர்கள் தொழிநுட்ப ரீதியில் எம்மை விட அதி உயர்வாகக் காணப்படலாம். எனினும் எம்மிடம் மிகவும் தரமானதும், மண் வாசனை கலந்ததுமான கதைகள் உள்ளன. உதாரணத்திற்கு மலையாளத் திரைத் துறையினை எடுத்துப் பாருங்கள். அவர்களது திரைப்படங்கள் குறைவான செலவில் எடுக்கப்பட்டாலும், தரமானதும், ஆழமானதுமான கதைகள் கொண்டனவாக இருக்கின்றன. எமது படைப்புக்களும் அவ்வாறானவையே. எம்மிடமுள்ள கதைகளும், திறமைகளும் உயர்வான தரத்தில் இருக்கும் பட்சத்தில், நாம் இந்தியத் திரைப்படத் துறையை ஒரு சவாலாகப் பார்க்கவில்லை.

**தேசம்** : குறுந் திரைப்படங்களிலும், பாடல்களிலும் அதிக நாட்டத்தைக் கொண்ட உங்களுக்கு, முழு நீளத் திரைப்படங்களைப் படைப்பதில் உங்களுக்கு ஏதேனும் விருப்பு உண்டா ?

**விஷ்ணு** : ஆம், தற்போது நாம் அவ்வாறானதோர் படத்தினைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றோம். அகிலனின் இயக்கத்தில், ஒரு திரைப்பட இயக்குனர் படும் துன்பங்களை மையமாக வைத்து சுமார் ஒரு மணி நேரம் ஓடக் கூடிய படத்தத்தினை உருவாக்கி வருகின்றோம்.

**தேசம்** : பல சவால்களின் மத்தியில் வளர்ந்து வரும் நீங்கள் இந்நாட்டின் இளைஞர்களுக்கும், திரை உலகிற்கும் சொல்ல வருவதென்ன. ?

**விஷ்ணு** : பல இளைஞர்கள் தரமான குறும்படங்களைப் படைக்கின்றனர். எனினும் தமது வேலைப் பளு காரணமாக அவர்கள் ஒரு சில படைப்புக்களுடன் நிறுத்தி விடுகின்றனர். ஆனால் அவர்கள் நம்பிக்கையுடன் தமது பயணத்தைத் தொடர வேண்டும். மென்மேலும் தரமான படைப்புக்களை உருவாக்க வேண்டும். நிச்சயம் சிறந்ததோர் எதிர்காலம் அவர்களுக்கு உண்டு. திரை உலகைப் பொறுத்த வரையில், எமக்குத் திரையரங்குகளின் ஆதரவு நிச்சயம் அவசியமாகின்றது. எமது படைப்புகளுக்கும் அவர்கள் ஆதரவளிக்க வேண்டும். அது நிச்சயம் எமக்கு உறுதுணையாக இருக்கும். அவர்கள் எம்மீது வைக்கும் நம்பிக்கைக்களுக்கும் , எதிர் பார்ப்புக்களுக்கும் ஏற்ப எமது படைப்புகள் தரமானதாக அமையும் என்ற உறுதியை எம்மால் வழங்க முடியும்.

இதுவரை விம்பம், என் இனிய காதலா, LIFT, ஒரு வழி போன்ற வெற்றிகரமான படைப்புக்களில் தனது திறமையை வெளிக்காட்டிய விஷ்ணுவர்த்தனின் நடிப்பிலும், செந்தூரனின் இயக்கம், வரிகள், இசையிலும், கிஷோத் சந்துருவின் குரலிலும் இவ் வருடத்தின் காதலர் தினத்தை ஒட்டி வெளிவந்த அவளும் நானும் என்ற பாடல் இளைஞர் மத்தியில் பெரும் வரவேற்பினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



## கலைத்தென்றல்

## சிறுகதை

ஒரு புறத்தில் பாறைக் கற்களின் மேல் துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்த ராமாயி. சலசலத்தோடும் நீ ஷரில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்த மகள் சித்திராவைப் பார்த்துப் பூரித்தாள். "என்னமாய் தளதள என்று வளர்ந்து விட்டாள்! மகிழ்வான நினைப்பே மறுபடியும் மனதைக் கலங்க வைத்திட நெடுமூச்செறிந்தாள். "காதில கழுத்தில் நகையில்ல கையிலையும் பணமில்லை ஒருத்தன்ர கையில கட்டிக்கொடுக்கிற வரையில மடியில நெருப்பைக் கட்டிக்கிட்டிருக்கணுமே"! பீலியில் வடிந்த தண்ணீர் சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. அம்மாவையும், அக்காவையும் பொருட்படுத்தாத முரளி, ஓடும் நீரில் பள்ளமான பகுதியில் குளித்துக்கொண்டிருந்தான். அவனோடு சேர்ந்து நண்பர்களும் கும்மாளமடித்து குளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த ராமாயி மகனை எண்ணி மகிழ்ந்தாள். அவன் நன்றாகப்படிப்பதாகவும், இந்த வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் இந்தப் பாடசாலையிலிருந்து முதன்முதலாக சித்தியடையும் மாணவனாக இருப்பான் என்றும் போன வாரம் கணக்கு வாத்தியார் சொன்னதிலிருந்து, முரளியை எப்பாடு பட்டாவது அடுத்த வருடம் நகரப்புற பாடசாலைக்கு அனுப்பி படிப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் துளிர்விட்டிருந்தது. தோட்டப்பாடசாலையில் ஐந்தாம் ஆண்டுக்கு மேல் இல்லை என்பதால், மலையிறங்கிப் பிரதான வீதியில் பஸ் எடுத்துத் தான் பாடசாலைக்குப் போக வேண்டும்.

கணவனை நினைக்கும்போது அவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வரும். குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட அவன், தான் உழைப்பதைக் குடியிலேயே கரைத்து விடுவதுடன், அவளது உழைப்பிலும் கைவைப்பான். ராமாயி மிகுந்த சிரமத்தின் மத்தியில் தான் குடும்பச் செலவைக் கவனித்து வந்தாள்.

கடந்த வாரம் அவர்களது வந்திருந்த வேலுசாமி, காளிமுத்துவுக்கு ஆசை காட்டியதை நினைத்த போது ராமாயிக்கு கோபம் ஒரு புறம் கவலை மறுபுறமாகவும் இருந்தது. வேலுசாமி, தோட்டத்திலுள்ள வளர்ந்த சிறுவர்கள், சிறுமிகள், ஓய்வு பெற்றவர்கள் என்போரை கொழும்புக்கு வேலைக்கு அனுப்பும் ஏஜென்டாக செயற்படுபவன். அதன் மூலம் அவனுக்கு நல்ல வருமானம் கிடைத்து வந்தது. கொழும்பில் வேலை கொள்வோரிடம் புறோக்கர் கட்டணமாக வசூலித்து விடுவதுடன், இங்கே அனுப்புவர்களிடமும் கறந்து விடுவான். எனினும் மிக அவசரமாக வேலைக்கு ஆள் தேவைப்படும்போது இவர்களுக்கு சிறிது முற்பணம் கொடுத்து ஆசை காட்டுவான்.

"என்ன காளியண்ணே, மகனைக் கொழும்புக்கு வேலைக்கு அனுப்பலாமே? சாப்பாட்டுக்கடை, சில்லறைக்கடை, புடவைக்கடை ஏதோ விரும்பினதில சேர்த்து, விடலாம் மாசாமாசம் சுளையாக சம்பளம் கொடுப்பாங்க"

வேலுசாமி ஆசை காட்டவே, ராமாயி குறுக்கிட்டாள், "மகன் படிக்கணும். நல்லாகப் படிக்கின்றான்னு வாத்தியார் சொன்னவரு"

காளிமுத்துவின் மனதில் ஆசை தொட்டுவிட்டதால் அவன் மனைவியின் கூற்றை மறுத்துரைத்தான். "படிச்சு இவன் என்னத்தைக் கிழிக்கப் போறான்? என்ன கவுண்மேந்து வேலையா கொடுக்கப் போறாங்க? வளர்ந்த பிறகு தேயிலை மலையில் கவ்வாத்து வெட்ட வேண்டியது தானே? அதைவிட இப்பவே கொழும்பு, கண்டிக்குப் போய் கடையில் வேலை செய்து முன்னுக்கு வரலாமே"

"ஆமா! அதானே? என்ன ராமாயியக்கா, அண்ணை சொல்லுறதும் சரிதானே?" வேலுசாமி ஆசை காட்டினான். "மகன் கடை வேலைக்குப் போயிட்டா மூணு வேளையும் அடுப்பு எரியும் மகளோட காது மூக்கிலையும் நகை போடலாம்" வேலுசாமி ஆசை காட்டினான்.

"படிக்கிற பிள்ளையை குழப்பாத வேலுசாமி மேல படிச்சு நல்லா வருவான்னு வாத்தியார் சொன்னாரு"

"ராமாயி, இது நடக்கிற காரியமா?... நடக்கப்போறதைப் பற்றி பேசு. நம்ம தோட்டத்தில் யாரு படிச்சாங்க?"

"இப்படியே சொல்லீண்டிருங்க, மத்த தோட்டங்களிலிருந்து பொடி பொட்டைங்கெல்லாம் டவுணுக்குப் போயி பெரிய படிப்பெல்லாம் படிக்குதுங்க! டெவன் தோட்டத்தில இருக்கிற என்ட அண்ணன் மவ, படிச்சு ரீச்சாரிட்டா பிள்ளைங்களுக்குப் படிச்சு கொடுக்கிறா"

வேலுசாமிக்கு ஏமாற்றமாய்ப் போய் விட்டது. காளிமுத்துவுக்கும் தான். எனினும் மனைவியை எதிர்த்துப் பேச முடியவில்லை. குடித்து வெளியேறிய நேரத்தில் தான் அவன் அட்டகாசம் பண்ணுவான். மற்ற நேரங்களில் அவன் பெட்டிப் பாம்பு! அவள் கை தான் ஓங்கியிருக்கும்.

வேலுசாமி ஏமாற்றத்துடன் எழுந்து செல்வதைப் பார்த்து ராமாயி ஒரு மெலிய சிரிப்புடன் லயத்துள் நுழைந்தாள். காளிமுத்துவின் முகம் அணிலேற விட்ட நாய் போலானது.

"இன்று ஞாயிற்றுக்கிழமை வேலுசாமி மறுபடியும் வரக்கூடும். வெறுங்கையுடன் இல்லாமல் போத்திலோடு வந்து காளிமுத்துவுக்கு ஊற்றிக் கொடுத்து காரியம் சாதிக்கப் பார்ப்பான். என்ன பாடுபட்டாவது மகனின் படிப்பை நிறுத்தி அனுபுறத தடுத்திட வேண்டும்." என திடசங்கற்பம் பூண்டாள் ராமாயி.


கொழும்புக்கு அவனை வேலைக்கு அனுப்புவது பற்றி கதை அடிபடுவதை முரளியும் அறிவான். கொழும்பு என்றதும் அவன் மனதிலும் கற்பனைகள் இருந்தது தான். அம்மாவிடம் சாடை மாடையாகக் கேட்டபோது அம்மா பக்குவமாக எடுத்துச் சொன்னாள். "டே முரளி கொழும்பு ஆசையை விட்டுத்தள்ளிடு. நீ படிக்கனும். படிச்சு நல்ல நிலைக்கு வருவேன. அப்பன்ர பேச்சில எடுபட்டு படிப்பைக் குழப்பியிடாத.

அம்மாவின் வழிநடத்தல் ஒரு புறம், ஆசிரியரின் கற்பித்தலும் அதன் பெறுபேறாக பாடங்களில் ஏற்பட்டு வரும் ஆர்வம் மறுபுறமும், அவனது கொழும்பு ஆசையை முடிவுக்குக் கொண்டுவந்தது. இப்போதெல்லாம் அவனுக்கும் படிப்பில் தான் ஆர்வம். இதனால் ராமாயிக்கு ஆறுதலாக இருந்தது.

பீலிக்கரையில் வேலைகளை முடித்த பின்னர் குளித்துவிட்டு, கழுவிய துணிகளையும் பாத்திரங்களையும் சுமந்தபடி ராமாயியும், சித்திராவும் முன் செல்ல முரளி பின் தொடர்ந்தான்.

முரளியை மாத்திரமல்ல, சித்திராவையும் கூட கொழும்புக்கு வீட்டு வேலைக்கு அனுப்பிவைத்திட காளிமு

# ஒரு தாயின் கனவு



**- சந்திரகாந்தா முருகானந்தம் -**

விருப்பம் தான். வேலுசாமியும் ாடுபட்டு களைத்துப்போனான். பெண்ணுகளை கண்காணாத வேலைக்கு அனுப்பியிட்டு பயந்தபடி இருக்கணும். ங்க! நாட்டில நடக்கிறதைப் பபோ எப்டிங்க பெண் பிள்ளை வேலைக்கு அனுப்புறதுங்க?... ந்ததும் தோட்டத்தில பெயர் கொழுந்து பறிக்கட்டுமுங்க. ன்டு பேரும் உழைக்கிறத வெச்சு ாம். நீங்க குடியை முதல்ல ங்க. சிறப்பாக வாழலாம். உட கெடுத்துக்கிறீங்க"

பி எடுத்துச் சொல்வதை லையில் இருக்கும்போது செவி ும் மாலையில நிறை வெறியில் காளிமுத்துவின் வழக்கம். எவ்வளவோ எடுத்துச் சொல் வன் கேட்பதாயில்லை.

ிற்றுக்கிழமையானாலும் சாந்த வேலைகளால் தொழி ருக்கு ஓய்வு கிடைப்பதில்லை. ல் விறகுக்காக கொள்ளி ுவதற்கு சித்திராவும், முரளி யிருந்தார்கள். அவர்கள் திரு. து கொள்ளிக் கட்டைகளை ில் போட்டு விட்டு நிமிர்ந்த வேலுசாமிதான் கண்ணில் "தொலைஞ்சு போவான். லாட வந்திருக்கிறான். அப்பன் சான்னாலும் நீ கொழும்புக்குப் சம்மதிக்காத!" என்று மெலிய சொன்ன, சித்திராவைத் தொடர்ந்து லயத்துள் நுழைந்த முரளி கோடிப்புறம் சென்று முகம் கைகால்களைக் கழுவிக்கொ ண்டு வந்து படிக்க ஆரம்பித்தான். காளி முத்துவும் வேலுசாமியும் குடித்துக் கொண்டிருந்தனர்.

வேலுசாமி தன் காரியத்தில் கண் ணாக இருந்தான். காளிமுத்துவுக்கு நிறைய ஊற்றிக் கொடுத்தபடி கேட்ட போது, "சரி! நாளைக்கே அனுப்பி வைக்கிறேன். கூட்டிக் கொண்டு போயிடு.." என்றான். இதைக் கேட்ட ராமாயி வெகுண்டெழுந்தாள். வேலுசாமியை ஏசி அனுப்பிவிட்டு கணவனையும் திட்டினாள்.

எல்லாவற்றையும் பார்த்து மிரண்டு போயிருந்த மகனிடம் வந்து அவ னை ஆதரவாக அணைத்தாள். "நீ படி ராசா. ஒண்டுக்கும் யோசிக்காத! அம்மா இருக்கிறன். கை விளக்கைக் கொழுத்தி வைச்சு அந்த மூலையில இருந்து படி." என குரல் தளதளக்கக் கூறி னாள். அம்மாவின் உற்சாகமூட்டலில் தொடர்ந்து படிப்பில் அக்கறை செலு த்திய முரளிக்கு வாத்தியாரும் கை கொடுத்தார். பலவித இடர்களுக்கும் மத்தியில் கவனமெடுத்துப் படித்த முரளி புலமைப் பரிசில் பரீட்சையும் எழுதினான். அவன் சித்தியடைவான் என்ற நம்பிக்கை அவனுக்கு மட்டுமன்றி அம்மாவுக்கும் வாத்தியாருக்கும் கூட இருந்தது.

நாம் நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்று ராமாயிக்கு மாதவிலக்கின் போது இரத்தப்பெருக்கு ஏற்பட்டு மயக்க முற்றாள். தோட்ட ஆஸ்ப்பத்திரிக்குக் கொண்டு சென்றபோது உடனடியாக சேலைன் ஏற்றி, பெரியாஸ்பத்திருக்கு தோட்ட வைத்தியர் அனுப்பி வைத்தார். குன்றும் குழியுமான பாதையில் வாகனம் சென்றபோது, குலுக்களில் இன்னும் அதிகமான இரத்தம் வெளியேறியது. பெரியாஸ்ப்பத்திரிக்குக் கொண்டு சென்ற போதும் ராமாயியைக் காப்பாற்ற முடியவில்லை. ஏற்கெனவே போஷ ாக்கின்மையினால் இரத்த சோகையால் பீடிக்கப்பட்டிருந்த அவளால் இரத்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தீவிர சிகிச்சையும் பலனளிக்காமல் இறந்து போனாள்.

அம்மாவைக் கொண்டு வந்து லயக் காம்பராவில் வளர்த்திய போது முரளியும் சித்திராவும் பெரும் குரலெடுத்து அழுதனர். அவர்கள் அழுததைப் பார்த்து முழுத் தோட்டமுமே கண்ணீர் விட்டது. அம்மாவின் பிரிவு சித்திராவுக்கும் முரளிக்கும் பேரிடியாக அமைந்து விட்டது. அப்பனின் கெடுபிடியும், அட்ட காசமும் அவர்களை வதைத்தது. சில நாட்களிலேயே வேலுசாமி மூலம் அவர் கள் இருவரையும் வீட்டு வேலைக்கு அனுப்பிவிட்டு இன்னொரு கலியாணம் செய்து கொண்டான் காளிமுத்து.

15»

## தேசம் நூலகம்

### பாவை நண்டுகள்



**(இலங்கை பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்)**

பாவை நண்டுகள் என்ற இந்தத்தொகுதியில் இலங்கைப் பெண்களின் இருபத்தைந்து சிறுகதைகள் அடங்கியுள்ளன. பெண்கள் போரின் உக்கிர விளைவுகளுக்கு வெவ்வேறு வகையில் முகம் கொடுத்தனர் குடும்ப மட்டத்தில் ஆண்கள் இல்லாமற்போக அதன் முழுச்சுமையும் தாங்குபவராக, முதல்வரை இழந்த அன்னையராக, கணவனை இழந்த மனைவியராக பெருமூச்செறிந்த பெண்கள் தமது சக போராளித் தோழிகளை இழந்து கண் கலங்கியோர், ஆசை யாக கட்டிய வீடு இடிபடப்பார்த்திருந்தோர், இடம் பெயர்ந்தோர் முகாம்களில் உடைமாற் றவோ, தமது குழந்தைகளுக்கு பாலூட்டவோ மறைவிடமும், தனியிடமும் இல லாமல் தவித்த பெண்கள் எதிர்கொண்ட துன்பங்களும், சவாரிகளும் வித தியாசமானவை என இந்த கதைகளை தொகுத்த பேராசிரியை மௌனகுரு சித்திரலோகா குறிப்பிடுகின்றார்.

மேலும், "கூர்ந்து நோக்கும்போது பெண் நிலை உணர்வுடன் எழுதுவோரின் எழுத்துக்களில் பெண் அடையாளம் தெரிகிறது என்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும்" என்கிறார்.

**தொகுப்பு: பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு**
**வெளியீடு மாற்று - சென்னை 106.**

### தஸ்லீமா நஸ்ரீன்



**இது எனது நகரம் இல்லை**

"மேற்கில் வாழும் ஸல்மான் ருஷ்டி போல அடிப்படை வாதிகளிடம் மன்னிப்புக்கேட்டு, தொடர்ந்து மேற்கில் வாழ எனக்கு விருப்பமில்லை மேற்குலகை நான் வெறுக்கிறேன். நான் கொண்டாட்டத்துக்கு உரியவளாக மேற்கில் நடத்தப்படுகிறேன். அரசுத் தலைவர்களை யும் தெருவில் போகிற மனிதர்களையும் நான் சந்தித்திருக்கிறேன். மனிதத்துயரம் என்பது உலகெங்கிலும் ஒன்றுதான் என்பதை நான் அனுபவித்திருக்கிறேன். உணர்வு பூர்வமாகவோ பொருளாதார அடிப்படையிலோ மேற்கில் வாழ்வது எனக்குச் சாத்தியமில்லை ஒவ்வொரு நாளும் நூறு முறை நான் இறக்கிறேன் என்கிறார் தஸ்லீம் நஸ்ரீன்.

"இது எனது நகரம் இல்லை"

என்ற - தலைப்பில் அவரின் கவிதைகளை ஆங்கில வழியாக தமிழ்ப்படுத்தி தந்துள்ளார் யமுனா ராஜேந்திரன்.

**தொகுப்பு: யமுனா ராஜேந்திரன்**
**வெளியீடு: உயிர்மை சென்னை.**

### வேறொரு மனவெளி




**சிங்கப்பூர் பெண் எழுத்தாளர்கள் சிறு கதைகள்**

சிங்கப்பூரில் இருக்கும் தமிழ்ப்பெண் எழுத்தாளர்களின் எழுத்துக்களை ஆவணப்படுத்தும் முதல் முயற்சி அல்லது சிறு முயற்சி என்று இத்தொகுப்பை அடையாளம் காணலாம் என்கிறார் தொகுப்பாசிரியர் பாலு மணிமாறன்.

மேலும் அவர், பகுப்புரையில் சிங்கப்பூர் மறு நடவுகள் மிகுந்த மாநகரம், இரவு வெற்றாக இருந்த உங்கள் வீட்டு வாசலில், காலை கண் விழிப்பில், சட்டென்று பூக்களோடு முளைத்து விட்ட புது மரங்களைப் பார்த்து நீங்கள் திகைத்து நிற்பது திகைப்பற்ற வாழ்க்கை முறையாகி விட்டது இங்கு. இந்த நகரம் வேறு உலகில் முளைவிட்டு வளர்ந்த திறன்மிக்க மனிதர்களையும் தயக்கமின்றி தனது பிள்ளைகளாகத் தத்தெடுத்துக் கொள்கிறது. அவர்கள் இயல்பாகக் காலூன்றுவதும் வேர் பரப்பிக் கிளை விடுவதும் தான் உலகக் கிராமத்தின் புதிய வாழ்க்கை முறையாகப் புரிந்து கொள்ளப்பட்ட கலாச்சாரமாக இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

உலகை ஒரு சிறு கிராமமாக்கி விடும் எத்தனிப்பில் சிங்கப்பூர் தளராமல் இயங்குவதை அருகிலிருந்து பார்ப்பவர்கள் உணர முடியும். இலக்கியம் மட்டும் இதன் போக்கிலிருந்து தப்பிவிடும்? இவ்வாறு தொகுப்பாசிரியர் பாலு மணிமாறன் பதிப்புரையில் குறிப்பிடுகின்றார்.

**தொகுப்பு: பாலு மணிமாறன்**



# கவியரங்கு

## சோதனைச் சாவடி

அவர்கள் என்
கைப்பையைத் திறக்கச்
சொல்லித்
துளாவித் தேடுகின்றனர்
அடையாளம் கேட்கின்றனர்

துள்ளி யெழுந்தென்னுள்
கலகஞ் செய்யும் ஏதோவொன்று.

நான்கு தசாப்தங்களுக்கு மேல்
நான் இம் மண்ணில்
வாழ்ந்துவிட்டேன்.

சாமான்யரான பாதசாரிகளுடன்
சாலைகளில் நடந்துள்ளேன்

அவர்களின் சுவாசக் காற்று
என் கூந்தலில் அலைபாய
பஸ் வண்டிகளில் நின்றவாறு
பயணஞ் செய்துள்ளேன்

தோளோடு தோளுரச
ஆலய வழிபாடுகளில்
அவர்களோடு நான்
கலந்து கொண்டுள்ளேன்

தெருக்களில் வீதிகளில்
கியூவரிசைகளில் நின்று
அவர்களோடு நான்
அதே கனவில் லயித்ததுண்டு

காக்கியணிந்த காவலனே
என் பையில்
குண்டு இருக்குமென
ஏன் நினைக்கின்றாய்?
இரத்தத்தைக் கண்டாலே
குமட்டலெடுக்கும் எனக்கு

நிரபராதிகளின்வதை கண்டு
துடிதுடிப்பவள் நான்.
எனினும் -
வலி தரும் செயல்கள் கண்டு
என் ரத்தம் கொதித்ததுண்டு

குணப்படுத்தும் கையின்
பேராசை கொண்ட விரல்கள்
தங்க நாணயம் கண்டு துடிப்பது

குரு தன் புனித கலையை
விலை பேசி விற்பது

துப்பாக்கியப் பண்டங்களை
நிறைத்துக்கொண்டே
நிச்சய மரணம் நோக்கிப்
பிணவண்டிகள் விரைவது

புதையல் காப்பவர்
புனித களஞ்சியத்தில்
கைவைப்பது

ஒருவேளை
இதனையெல்லாம்
என் கண்ணில் நீ
காணல் கூடும்.

நான் கொலைகாரியல்ல

குளத்துக்கும் கோவிலுக்கும்
ஒருபோதும் நான்
கட்டுண்டு கிடக்கப்போவதில்லை

என் விரல்கள்
மரத்துவிட்டன.
அறுவை சிகிச்சையால்
நோயாளி குணமடையப்
போவதில்லை
ஆழமாய்ப் படர்ந்துள்ளது
புற்றுநோய்
ஆபரேஷன் கத்தி பயன்படாது
எமக்குத் தேவை
எரிதழல்
கருஞ் சாம்பலி லிருந்து
தூய்மைப்படுத்தப்பட்ட ஆன்மா
எழுகையில்
உள்ளுறுப்புகள் யாவும்
எரிந்துபோயிருக்கும்

மண்ணில் புதுவிதை முளைவிடும்

இது நடக்கப்போவது
என்னாலல்ல
ஒரு வேளை
கடவுளரால் இது நடக்கும்
அவர்களின்
கருணைமிகு கோபத்தால்
இது நடக்கும்

ஆதலால் நண்பனே

என் பையை நீ திறந்து பார்

உன் சேவையின் மேலாண்மையை
என் தலைமேல் சுமத்து

என்னிடம் உள்ளதெல்லாம்
என் பழைய குமிழ்முனைப்
பேனா மட்டுமே

அச்சுறுத்தும் கருவியாய்
அதைக் கருத மாட்டாயென
உறுதியாய் நம்புகிறேன்.

**ஆங்கிலம்: கமலா விஜேரத்ன**
**தமிழில்: பண்ணாமத்துக்கவிராயர்**

## ஓசை புதையும் வெளி

உரக்கப் பேசுவதாய்க்
கோபப்பட்டாய்
மிகுந்த ஓசையுடன் காரியமாற்றுவதாய்க்
குற்றம் சாட்டினாய்
புணர்ச்சியில் கூட முனகல்கள்
தெருவெங்கும் இறைவதாய்
எரிச்சலட்டாய்
வெடிக்கும் என் ஆர்ப்பரிப்புகள்
உனக்குள்
வெந்நீர்க் கொப்புளங்களையே
உருவாக்கின எப்போதும்
மெல்ல அடங்கிய என் சப்தங்கள்
புதைக்கப்பட்டன உன் வெளியில்.

**தி. பரமேசுவரி**

## என்ன தவம் செய்தேன்

உன் சாப்பாடு மேசையில்
எப்போதும் உணவு தயாராக இருக்கிறது
சரியான சூட்டில்!

உன் தாகத்திற்குத் தகுந்த பானங்கள்
நீட்டிய கைக்குள் புதைகின்றன

உன் சட்டைகள் சலவை மடிப்புடன்
பொத்தான்கள் தைக்கப்பட்டு
நீ புகுந்து கொள்வதற்குக் காத்திருக்கின்றன!

உன் குழந்தைகள் குளிப்பாட்டப்பட்டு
நல்ல உடையணிந்து

நீ கொஞ்சுவதற்குத் தோதாய்
எப்போதும் வாசமாக இருக்கின்றன
அவை அசுத்தமும் செய்யும் என்று
நீ அறிந்திருப்பதற்கில்லை!

உன் அலுவலகக் கோபங்கள்
என் கன்னத்தில் அறையாகப்
படிவதைப் புரிதலோடு
ஏற்றுக் கொள்கிறேன்

உன் மருத்துவமனைத் தங்கல்கள்
கிட்டதட்ட ஆனந்தமான
விடுமுறையாகவே கழிகின்றன
என் உறக்கத்தையும் வேர்வையையும்
கடைசி சொட்டு வரை உறிஞ்சிக் கொண்டு!

நீ பதக்கம் வாங்கும்போது
கூட்டத்தில் நின்று நானும் கைதட்டுகிறேன்
உன் பதக்கங்களுக்குப்
"பாலிஷ்" போடுவதற்கான பாக்கியம்
கிடைத்திருக்கிறதென!

சுமங்கலியாக சாகவேண்டும்
என்ற பிரார்த்தனையுடன்
உறங்குகிறேன் அன்றாடம்


நன்றி
வா என் கணவனே!
நிறையப் பதக்கங்கள் வாங்குபவனாக
நம் மகனையும்
நன்றாகப் "பாலிஷ்" போடுபவளாக
நம் மகளையும் உருவாக்குவோம்!

**- தாமரை -**

### தேசம் வாசகர்களுக்கு...

தேசம் பத்திரிகையின் வளர்ச்சி வாசகர்களின் கருத்துகளிலேயே தங்கியுள்ளது. உங்கள் எண்ணங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். கதை, கட்டுரை, கவிதை, அரசியல் விமர்சனங்களை அனுப்பிவையுங்கள்.

**"தேசம்", 22/13 1/1 சமன் உயன, தம்பஹேன வீதி, மகரகம.**
E-mail: deshamnews@gmail.com





# மக்களை அகதிமுகாம் கூடாரத்தில் குடியமர்த்தி முடிசூடிய அமைச்சர்

“வருவதானால் குதிரையில் ஏறிவரவேண்டும், அல்லது படுக்கையை சுருட்டிக் கொண்டு போகவேண்டும்” என ஒரு பழமொழி உள்ளது. ஆட்சிபீடம் ஏறுவோர் எப்போதும் குதிரை மேலேறி பயணிக்கிறார்கள். சாதாரண மக்களுக்கு படுக்கையும் இல்லாமற் போயுள்ளது. கடந்த 68 வருடங்களாக ஆட்சியில் இருந்த அனைவரும் இந்நாட்டு அனைத்து மக்களையும் இந்நிலைக்கு தள்ளியுள்ளனர் இவை இரகசியமான விடயங்களல்ல.

குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களை படுக்கையும் இல்லாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். யுத்தம் முடிவடைந்து சுமார் 7 வருடங்கள் கடந்து விட்டது. ஆனால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்களுக்கு இன்னமும் உரிய இருப்பிட வசதி வழங்கப்படவில்லை. வீடுகளை நிர்மாணிக்கும் பொறுப்பை டீ.எம்.சுவாமிநாதன் அவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. அவர் சிறைச்சாலை, புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சராவார்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 65,000 வீட்டுத் திட்டத்திற்கு பொறுப்பாக இருப்பது அமைச்சர் சுவாமிநாதன் அவர்களாகும். ஏனென்றால் வேறு இனத்தவரைவிட தமிழர்களின் பிரச்சினை நன்றாக உணருவது ஒரு தமிழர் என்ற காரணத்தினால் தானோ இவரை இதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என நம்புகிறோம். ஆனால் செயற்பாடுகள் அவ்வாறு உள்ளதா என்று திரும்பிப்பார்க்கும்போது அது அப்படியுள்ளதா என்பது கேள்வி குறியாகும். தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற வேறுபாடின்றி அனைத்து ஆட்சியாளர்களும் பதவியேற்ற நாள் முதல் தமது சுயநலத்தைப் பற்றியே யோசிக்கிறார்கள். இதற்கு அமைச்சர் சுவாமிநாதன் அவர்களும் விதிவிலக்கல்ல.

இவர் இரண்டு வகையாக மக்கள் பணத்தை மோசடி செய்கின்றார் என தெரியவருகிறது. முதலாவதாக 2015ம் ஆண்டு 35,000 சதுர அடி கட்டிடத்தை அமைச்சுக்காக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். இதற்கு ஒரு மாத வாடகை 30 லட்சம் ரூபாவாகியது. இதனூடாக பெருந்தொகை பணத்தை மோசடி செய்ததாக தெரியவந்தது. எப்படி என்றால் அரசாங்க மதிப்பீட்டாளர்களுக்கு இணங்க ஒரு சதுர அடி ரூபா. 85.47 சதமாகவே மதிப்பிடப்பட்டது. ஆனால் இறுதியில் ஒரு சதுர அடி 145.00 ரூபாவுக்கு வாடகைக்கு பெறப்பட்டது. சீ.எம்..ீ.சீ.எம்..ீ.சீ.ீ.ஆர்.பி.ீ.79 இலக்க கடிதத்தின் ஊடாக மாதாந்த வாடகையை 42 லட்சம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இறுதியில் அமைச்சரவை அனுமதி பத்திரத்தில் மாதாந்த வாடகை 50,75,000.00 லட்சம் ரூபாவாக காணப்பட்டது. இந்த மோசடிகளுக்கு எதிராக செயற்பட்ட அமைச்சின் செயலாளர் உட்பட்ட அதிகாரிகளுக்கு பாரிய அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் புனரமைப்பிற்காக வழங்கவுள்ள பணத்தை இவ்வாறு மோசடி செய்வது குறித்து 2016 மார்ச் 24ம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க அவர்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார். ஆனால் அமைச்சர் சுவாமிநாதன் அவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஐக்கிய தேசிய கட்சியும் ஊழல், மோசடிகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் செயற்படுகின்றதே தவிர அவற்றை நிறுத்துவதற்கு செற்படுவதில்லை என்பது அவர்களின் நடவடிக்கைகள் கோடிட்டுக் காட்டுகின்றது.

மறுபுறம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு 65,000 வீடுகளை கட்டிக்கொடுப்பதற்கான திட்டமொன்று செயற்பட்டு வருகின்றது. இவற்றை “பொருத்து வீடுகள்” என்றே அழைக்கப்படுகின்றன. தேவையான இடத்துக்குச் சென்று அந்த இடத்தில் மிகவும் குறுகிய காலத்தில் இவ்வீடுகளை பூட்டும் நிலையில் உள்ளதாக கூறப்படுகின்றது. ஆரம்பத்தில் ஒரு வீட்டுக்கு 12 லட்சம் ரூபாவாகவே மதிப்பிட்டிருந்தது ஆனால் பின்பு எவ்வித அறிவித்தலும் இன்றி திடீரென்று 21 லட்சம் ரூபாவாக ஒரு வீடு மதிப்பிடப்பட்டது. எதனடிப்படியில் மதிப்பு அதிகரித்தது என்று யாருக்குமே தெரியாது.

வெளிநாடுகளிலிருந்து கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் நிதியினாலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. திடீரென்று அதிகரிக்கப்பட்ட 9 லட்சம் ரூபாவை 65,000ல் பெருக்கிப் பார்த்தால் அத்தொகை 4,550 கோடி ரூபாவாகும் இதில் பெரும்பாலான தொகையை மோசடி செய்வதற்குத் தயாராகின்றனர் என்பது மக்களுக்குத் தெரியவருகிறது உரிய அமைச்சர் இதற்கு நேரடியாக பொறுப்பு கூறவேண்டும். இந்திய கடன் திட்டத்துக்கு அமைய ஒரு வீட்டை 5,50,000.00 ரூபாய்க்கே மதிப்பிடப்பட்டது. அவ்வாறு நோக்கும்போது 12 லட்சத்தில் 6,50,000.00 ரூபாவை மோசடி செய்தால் அத்தொகை 4,225 கோடி ரூபாவாகும்.

எனவே 5,50,000.00 மதிப்பிடப்பட்ட வீடொன்றை 21 லட்சத்துக்கு மதிப்பை உயர்த்தப்படும் போது அதில் 15,50,000.00 லட்சம் ரூபாவை மோசடி செய்தால் இதனை 65,000ல் பெருக்கிப் பார்த்தால் அத்தொகை 8,775 கோடி ரூபாவாகும் இவ்வளவு இல்லாவிட்டாலும் வரலாற்றில் நடந்ததைப் போன்று இதில் பெரும்பாலான தொகையை மோசடி செய்வதையேயே அவதானிக்க முடிகின்றது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களை காட்டிக்கொண்டு இவ்வாறு மக்கள் பணத்தை மோசடி செய்வது எந்த வகையில் நியாயமாகும்.

மக்கள் பெரும் எதிர்பார்புகளுடன் இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்தாலும் ரணில் - மைத்திரி கூட்டரசாங்கமும் இவ்வாறான மோசடியாளர்களை நியமித்துள்ளது கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறு மோசடியில் ஈடுபடும்போது மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பது கனவாகவே இருக்கும். அமைச்சர்கள் கோடிக்கணக்கான பணத்தை சம்பாதித்துக் கொள்வார்கள், மக்கள் தொடர்ந்தும் அகதிமுகாம்களில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்படுவார்கள்.

இந்த அநீதிகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் அநுர திஸாநாயக்க அவர்கள் கேள்வி எழுப்பினர் என்று ஏற்கனவே குறிப்பிட்டோம். இவற்றுக்கு பதில் சிலசமயம் இத்திட்டத்தை இடைநிறுத்துவார்களா? என்பது தெரியாது. இப்போது ஆமை வேகத்தில் வீட்டுத் திட்டங்கள் நடைமுறைபடுத்தி வருகிறார்கள். இப்படிச் சென்றால் வீடுகளை கட்டி முடிவதற்கு 30 வருடங்கள் கடக்க நேரிடலாம். எனவே மக்கள் பல வருடகாலமாக அல்லது வாழ்க்கை முழுவதும் அகதி முகாம்களில் வாழும் நிலையை சந்திக்கலாம்.

இந்நிலையிலிருந்து மீள முடிவதும் மக்களாலேயே ஆகும். 68 வருடகாலமாக இந்நாட்டை ஆட்சி செய்த ஊழல் பேர்வழிகளுக்கு வாக்களிப்பதற்குப் பதிலாக இந்நாட்டை நேசிக்கும், மக்களை நேசிக்கும் நேர்மையான நபர்களுக்கு வாக்களிப்பதால் இந்நிலையை மாற்ற முடியும்.

சந்திரமோகன்

# இலங்கை அரசியல் வரலாற்றின் சில பதிவுகள்

சுதந்திரத்திற்கு முற்பட்ட பல ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய வெள்ளையர் ஆட்சியில் நாடு தழுவிய ரீதியில் மக்கள் பல ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகியிருந்தனர். தென் இலங்கையில் ஏகாதிபத்திய அரசுக்கும் அதனுடன் கூட்டுச் சேர்ந்த தரகு முதலாளித்துவத்துக்கு எதிராகவும் இடது சாரிகளின் தலைமையில் தொழிற்சங்க இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் பகுதிகளிலும் ஆசிரியர்கள் எழுதுவினைஞர்கள் உள்ளிட்ட ஊழியர்களும் அதில் இணைந்துள்ளனர். அன்றைய காலகட்டம் இலங்கையின் அநேக பகுதிகள் நிலப்பிரவத்துவ, சாதித்துவ, பிடிப்புகள் வழுவாக இருந்த காலகட்டமாகும். சுதந்திரத்திற்காகப் போராடுவதற்கு மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்புவதில் இடதுசாரிகளே முன்னின்று உழைத்தனர்.



1948இல் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு வலுவடைந்த காலகட்டமாகும். அக்காலத்தில் பெயரளவிலான சுதந்திரம் ஒன்று கிடைத்தது. டி.எஸ். சேனாநாயக்க ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். சுதந்திரத்திற்காக போராடிய மக்களின் தலைமைக்கு எதிராக ஒரு வாக்குப் பலத்தை தமிழர் ஒருவர் டி.எஸ். சேனாநாயக்காவுக்கு வழங்கியிருந்தார். அதன் பின்னர் நிலப்பிரபுத்துவ அதிகாரமும், சாதிய அதிகாரமும் கோலோச்சியிருந்தது. வடபகுதித் தமிழ் சமுகத்திலும் அது வலுவாகப் பிரதிபலித்திருந்தது. இதே வர்க்கத்திலிருந்து தோன்றிய முதலாவது தமிழ் கட்சி தமிழ் காங்கிரஸ் கட்சியாகும். இதனுடைய முழுமையான குணாம்சம் மேட்டுக்குடி சாதித்துவ அமைப்பாகும். அத்துடன் ஆங்கிலேய அடிவருடும் கட்சியுமாகும். அந்நேரத்தில் திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சி டி.எஸ். சேனாநாயக்காவின் ஆட்சியில் மந்திரிப் பதவியைப் பெற்று ஐ.தே.கயின் மறுப்பதிப்பாக மாறியுள்ளது. இக்கட்சி தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமைப்பறிப்புக்கும் ஏனைய இலங்கை வாழ் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராகவும் உயர் சாதிக்கட்டமைப்பை பலப்படுத்துவதிலும் ஊக்கமுடன் செயற்பட்டது.

இக்காலகட்டத்தில் தமிழக் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக எஸ்.ஜே. வி. செல்வநாயகத்தின் தலைமையில் கே. வன்னியசிங்கம் டாக்டர். ஈ.எம்.வி. நாயகநாதன் ஆகியோர் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தனர். இக்கட்சியை உண்மையான தமிழ்த் தேசியக் கட்சி என்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்சி என்றும் தமிழ் மக்கள் நம்பியிருந்தனர். அன்றைய காலகட்டத்தில் தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடாவடித்தனங்களால் பொதுக்கூட்டங்கள் நடத்தும் அளவிற்குத் தமிழரசுக் கட்சியிடம் பலம் இருக்கவில்லை. ஏனெனில் சட்ட வள்லுனர் ஜி.ஜி. யின் துணையுடனான சண்டியர் படை காங்கிரஸ் கட்சியிடமே இருந்தது. அன்றிருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மேடைப்பாதுகாப்புத் துணையுடன் தமிழரசுக் கட்சி பொதுக்கூட்டங்களை நடத்தியது. 1953ம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக அன்று நடைபெற்ற ஹர்த்தாலில் ஸ்ரீ.ல.சு. கட்சி பங்குபற்றியது போல் தமிழரசுக் கட்சியும் பங்குபற்றியது. தமிழரசுக் கட்சி கே. வன்னிய சிங்கத்தின் மரணத்தின் பின் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் தலைமையில் வைட் கொலர் என்று சொல்லப்பட்ட பிற்போக்குப் பாதைக்குத் தமிழ் மக்களை இழுத்துச் சென்றுள்ளனர். 1965ம் ஆண்டில் அவரும் ஐ.தே.க. வுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு துரோகம் செய்யததுடன் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையையும் ஆதரித்துச் செயற்பட்டுள்ளார்.

1956ம் ஆண்டிற்கு முன்னர் ஜே.ஆர் ஜெயவர்த்தனா அவர்கள் ஐ.தே.க. வின் களனி மாநாட்டில் தான் பதவிக்கு வந்தால் சிங்கள மொழியை அரச கரும மொழியாக்குவேன் என்று கூறியிருந்தார். பண்டாரநாக்க 1956ல் பதவி ஏற்றப்போது ஜெ.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசியற் கைதியாகி உடனடி நடவடிக்கையாக சிங்களத்தை அரச கரும மொழியாக்க முடிவு செய்தார். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தமிழ் மொழிப் பயன்பாடு தமிழ் பிரதேசங்களில் இருக்கவேண்டும் என்பதற்கிணங்க கொம்மியூனிஸ் கட்சி வலியுறுத்தியிருந்தது போல் உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டது. அதுவே பண்டா, செல்வா உடன்படிக்கையாகும். அதைப் பிழையான விடயம் என்று ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் களனியிலிருந்து கண்டிக்கு பாதையாத்திரை மேற்கொண்டார் இவ்யாத்திரை ஆரம்பித்த சிறிது தூ ரத்தில் பேலியகொடையில் வலிமறித்துத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதற்கு தலைமையேற்றிருந்தவர் எஸ்.டி. பண்டாரநாயக்கா ஆவர். அவர் சில காலம் முக்கூட்டணி அரசாங்கத்திலும் அங்கம் வகித்திருந்தார். அக்காலக் கட்டத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியுடனும் இணைந்துக் கொண்டார். கம்யூனிஸ்ட் கட்சி சிங்களத்தையும், தமிழையும் ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று கோரிக்கை விட்டிருந்தது. கொழும்பு நகர மண்டபத்தில் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய கூட்டத்தில் பேரினவாதிகள் கண்மூடித்தனமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களைத் தாக்கியுள்ளனர். பலர் படுகாயங்களுக்கு ஆளாகினர். இக்கால கட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி வடபகுதியில் செயற்பட்ட அனைத்துக் கட்சிகளையும் கூட்டமொன்றுக்கு அழைத்திருந்தது. தமிழையும் ஆட்சி மொழியாக்கவேண்டுமென்பதே அதன் இலக்காகும். தமிழ் மக்களின் இரட்சகர்கள் என்று கூறிக்கொண்ட தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமிழ் அரசுக்கட்சியும் அனுப்பியிருந்த பதிலை இன்றைய தமிழ்ச் சந்ததியினர் அறிந்தால் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைவர். தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் அனுப்பியிருந்த பதிலில் ஆங்கிலத்தையே தமது கட்சி ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருப்பதால் தான் பங்குபற்ற முடியாது என்று கூறியிருந்தார். தமிழரசுக் கட்சியினர் அனுப்பியிருந்த பதில் தமிழ் காங்கிரஸ் கட்சி பங்குபற்றினால் மட்டுமே தாம் கலந்து கொள்வதாகவும் அறிவித்திருந்தனர். இந்நிலையில் கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சி வெற்றியளிக்கவில்லை. அன்றையக் காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பிரதேச சுயாட்சிக் கொள்கையை முன்வைத்திருந்தது. தமிழ் காங்கிரஸ் தமிழரசுக் கட்சி ஆகியன இக்கொள்கையை வலிமையுள்ளதாக்க விரும்பியிருக்கவில்லை. அதற்கான காரணம் தென் இலங்கையுடனான அரச உத்தியோகப் பங்கீட்டிற்குப் பங்கம் ஏற்பட்டுவிடும் என்றும் வர்த்தக ரீதியான சுரண்டலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்றும் எண்ணியிருந்தனர். கம்யூனிஸ்ட் கட்சி மீது அன்றைய இளஞர்களின் கவனம் திரும்பியிருந்தது. அதற்கு இன்னொரு காரணமும் இருந்துள்ளது. தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் நடத்திய போராட்டத்தின் மூலம் இளைஞர்களின் ஆதரவு கம்யூனிஸ்ட் கட்சியின் பால் திரும்பியிருந்தது. அதைச் ஜீரணிக்க இரு தமிழ் கட்சிகளும் விரும்பவில்லை. தேசிய ஒடுக்குமுறைக்கும் பிரிவிணைக்கும் எதிரான ஒரு இயக்கத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியே முன்னெடுத்திருந்தது.

தமிழரசுக் கட்சி தனது பிரசாரத்தில் கம்யூனிஸ்ட் ஊடுருவல் என்றும் தமிழ் இளைஞர் அதை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும் அவர்களது கட்சியின் பத்திரிகையான சுதந்திரன் ஊடாகவும் பிரசாரம் செய்தனர். பொதுக்கூட்டங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சியை தாக்கியுள்ளனர். முன்பு இவர்களின் கூட்டங்களுக்கு வழங்கிய பாதுகாப்பு நன்றியையும் மறந்து விட்டனர். 1970ம் ஆண்டில் பதவியேற்ற முக்கூட்டணி அரசின் தேசியக் கொள்கையை கம்யூனிஸ்ட் கட்சியின் சில உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டனர். இன்னொரு பகுதியினர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மக்கள் விடுதலை முன்னணியின் அன்றைய போராட்டத்தின் நியாயத்தன்மையை சில கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஏற்றிருந்தனர். சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி அணியே வடபகுதியில் பலம் வாய்ந்திருந்தது. கட்சிக்குள் ஏற்பட்டிருந்த பிளவுகளின் பிரதான விடயங்கள் மக்கள் விடுதலை முன்னணி சம்பந்தமாகவும் கூட்டரசாங்கம் பற்றிய நிலைப்பாடும் தொழிற்சங்க வாதம் மற்றும் கட்சித் தலைமைத்துவம் பற்றிய நிலைப்பாடும் பிளவுகளை ஏற்படுத்திருந்தது. இருப்பினும் தோழர் எம்.கார்த்திகேசன் அவர்கள் தலைமையில் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி என்ற அமைப்பு பரந்துப்பட்ட தமிழ் அமைப்புகளை ஒன்றிணைத்து போராட முற்பட்டது.

1977ம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களின் தலைமையிலான ஐ.தே.க ஆட்சி 5/6 பங்கு பலத்துடன் பதவியேற்றது. ஸ்ரீ.ல.சு. கட்சியின் 8 பேர் மாத்திரமே பாராளுமன்ற ஆசனத்தை பிடித்திருந்தனர். தமிழரசுக் கட்சி 18 ஆசனங்களைப் பிடித்திருந்தது. சம்பிரதாயப்படி எதிர்கட்சி ஆசனம் தமிழரசுக் கட்சிக்கு கிடைத்திருந்தது. திரு. அ. அமிர்தலிங்கம் எதிர்கட்சித் தலைவரானார். ஆனால் அவர் ஏகாதிபத்திய நவக்காலணித்துவ பொருளாதார முறைக்கு எதிராகவோ ஏகாதிபத்திய அடிவருடிகளுக்கு எதிராகவோ குரலெழுப்பியிருக்கவில்லை. ஸ்ரீமாவோ அம்மையார் அத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்தப்படியால் அவரின் குடியுரிமையைப் பறிப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது. அம்மையார் மிக துயரத்துடன் நாடு பூராவும் பாமர மக்கள் வாழும் பிரதேசங்களுக்குச் சென்றுள்ளார். யாழ்ப்பாணத்திலும் திறந்தவெளி அரங்கில் பிரமாண்டமான அனுதாபக்கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் தென் இலங்கை இடதுசாரித் தலைவர்களும் வடபகுதி இடதுசாரித் தலைவர்களும் தமிழரசுக் கட்சியும் கலந்துக் கொண்டது. தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் மாவை. சேனாதிராசா உரையாற்றினார். அன்றையக் காலகட்டத்தில் அவர் ஒரு சிறைமீண்ட செம்மலாவார். சிவசிதம்பரம் பா.உ. அவர்களும் உரையாற்றினார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் சிகா செந்தில்வேல் அவர்களும் உரையாற்றினார். அவரது உரை ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் ஜே.ஆரின் ஆட்சிக்கு எதிராகவும் கர்ண கரூரமான உரையாகவும் காணப்பட்டது. சிவசிதம்பரம் பா.உ. ஆற்றிய உரையில் வடபகுதி தமிழ் விவசாயிகள் பொருளாதார வளர்ச்சியை ஸ்ரீமாவோ அம்மையாரின் ஆட்சியில் தான் அதிகமாக பெற்றிருந்தனர் என்று கூறியிருந்தார். ஐ.தே.க ஆட்சியில் பிரிவினவாத யுத்தம் அதிகரிக்கப்பட்டது. பாமர இளைஞர்கள் அநேகர் விடுதலை யுத்தத்தில் இணைந்து கொண்டனர். 17 வருடங்கள் ஜே.ஆரும் பிரேமதாஸ வும் டிங்கிரிபண்டா விஜேதுங்கவும் ஆட்சி புரிந்தனர்.

தொடரும்...

ராஜேந்திரன்

சமர்

# விவசாயிகள் சீற்றம், பாரிய போராட்டங்கள் அமைச்சு சுற்றி வளைப்பு




அகில இலங்கை விவசாய சம்மேளனத்தினரால் வரட்சி காரணமாக பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ 50000 நட்ட ஈடு வழங்குமாறு பெப்ரவரி 13ம் திகதி எம்பிலிபிட்டிய நகரில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்து. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஹம்பாந்தோட்டை, மொனராகலை, எம்பிலிப்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பங்கேற்றதுடன், வறட்சியால் பாதிப்புக்குள்ளான தமது வயல் நிலங்களுக்கு நட்ட ஈடு வழங்குமாறு கோஷங்களையும் எழுப்பினர். இலங்கையில் அண்மைக் காலங்களில் நடந்த விவசாயிகளின் ஆர்ப்பாட்டங்களில் அதிகளவான ஆர்வத்துடன் மக்கள் பெருந் திரளாகப் பங்கெடுத்த ஆர்ப்பாட்டம் இதுவாகும்.

இதனைத் தொடர்ந்து, பெப்ரவரி 16ம் தகதி, மாவட்ட விவசாயத் தலைவர்களுடன் அகில இலங்கை விவசாய சம்மேளனத்தினர் கொழும்பு ராஜகிரிய நகரில் அமைந்துள்ள விவசாய அமைச்சினால் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள புதிய கட்டிடம் சுற்றி வளைக்கப்பட்டது. இக் கட்டிடமானது கடந்த வருடம் ஏப்ரல் மாதம் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது என்றும், முற்பணமாக 58 கோடி 62 இலட்சத்து 8800 ரூபாயும், சேவைக் கட்டணமாக 6 கோடி 30 000 ரூபாயும், ஏப்ரல் மாதத்தில் 2 கோடி 37 இலட்சத்து 76200 ரூபாயும், மே, ஜூன் மாதங்களில் தலா 2 கோடி 46 இலட்சத்து 33000 ரூபாயும் அதனைத் தொடர்ந்து இன்று வரை 2 கோடி 36 இலட்சத்து 76200 ரூபாய்களும் செலவழிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இது வரையில் இந்த வெற்றுக் கட்டிடத்திற்கு 89 கோடி 69 இலட்சத்திற்கும் அதிகமான பணம் செலவழிக்கப்பட்டுள்ளதுடன், இதன் பிரகாராம் எதிர் வரும் 5 வருடங்களுக்கு 208 கோடிகளுக்கும் அதிகமாக செலவழிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வேளையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த குறித்த சம்மேளனத்தின் தலைவர் நாமல் கருணாரத்ன அவர்கள், “விவசாய மக்கள் வறட்சியினால் தமது பயிர்களை இழந்து பெரும் துன்பத்திற்கு உள்ளாகியிருக்கும் வேளையில், இவ் வெற்றுக் கட்டிடத்தின் மீது செய்யும் செலவு மிகவும் அநியாயமானதாகும். இது வரை காலமும் விவசாய அமைச்சு இயங்கி வரும் கட்டிடத்திற்கு என்ன நடந்தது ? இதில் பாரிய ஊழல் இடம் பெற்றிருக்கின்றது. இங்கு வருகை தந்திருப்பது வெறும் விவசாயத் தலைவர்கள் மாத்திரமே. எம்பிலிபிட்டிய நகரில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆயிரக்கணக்காண விவசாயிகள் வீதிக்கு இறங்கியமை போன்று, கொழும்பிலும் நிலையை ஏற்படுத்த வேண்டாம்” என்றூம் எச்சரிக்கை விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து தமக்கு நட்ட ஈடு வழங்குமாறு கோஷங்களை எழுப்பியும், நாட்டில் ஊழலை இல்லாதொழிக்க வேண்டுமெனவும் கோஷமிட்ட விவசாயத் தலைவர்கள், தாம் கொண்டு வந்த பதாகைகளைக் குறித்த கட்டிடத்தின் முன்னர் காட்சிப் படுத்திய பின்னர், களைந்து சென்றனர்.

**ரஞ்சிதன்**

# ரூபாவின் மதிப்பு வீழ்ச்சி

வரலாற்றில் முதற் தடவையாக ரூபாவின் பெறுமதி மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நாளாந்த நிதியறிக்கையின்படி தற்போது அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 153.44 வரையில் அதிகரித்துள்ளது. அதற்கேற்ப அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலையாக 149.68 ரூபாவாகும். அமெரிக்க டொலருக்கு ஒப்பீடாக வரலாற்றில் முதற் தடயையாகவே ரூபாவின் மதிப்பு இவ்வளவு மோசமாக வீழ்ச்சியடைந்திருப்பதாக பொருளாதார வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். இது நாட்டிற்கும் மக்களுக்கும் மிக பாதகமான விளைவுகளையே ஏற்படுத்துமெனவும் தெரிவிக்கினறர்.

**ரமேஸ்**

09» சித்திரா வேலைக்குப் போன இடத்தில் கடுமையான வேலைகளும், துன்புறுத்தலும் இருந்தாலும், முரளி வேலைக்குச் சென்ற இடம் பரவாயில்லை. பூந்தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்றுவது, வீடு வாசல் கூட்டித் துப்பரவாக்குவது, நாயைக் குளிப்பாட்டுவது என குறிப்பிட்ட வேலைகளே இருந்தன. சாப்பாட்டு விசயத்திலும் குறையிருக்கவில்லை. முதலில் அவனைப் பார்த்ததும் உறுமிய அல்செசன் நாயும் இப்போது அவனோடு சினேகிதமாகி விட்டது. வீட்டுக்காரரின் மகன் நிசாந்தனுக்கும் அவனது வயது தான். அவன் பாவித்துக் கழித்த உடைகள் இவனுக்குக் கிடைத்தன. அவை கூட மிகவும் தரமானவையாக இருந்தன.

நிசாந்தன் அவனுடன் நட்புறவு என்றில்லாது விட்டாலும் அன்பாக இருந்தமை முரளிக்கு ஆறுதலளித்தது. வீட்டுக்கார முதலாளி சாந்தமானவர். அவனை கடிந்து கொள்ளுவதும் இல்லை. எஜமானி அம்மா தான் எப்போதும் ஏசிக்கொண்டிருப்பாள்.

எஜமானின் மகன் பள்ளக்கூடம் வெளிக்கிட்டுப் போகும் போது முரளியின் மனதில் அவனையும் மீறி ஒரு வித ஏக்கம் குடிகொள்ளும். புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் எப்போது வரும்?... நான் பாஸ் பண்ணுவேனா? என யோசிக்கும்போது நெஞ்சம் உருகும்.

நிசாந்தன் நகரிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் படித்துக் கொண்டிருக்கிறான். போதாதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் தனிப்பட்ட வகுப்புகள் வீட்டுக்கு வந்த பிரபலமான ஆசிரியர்கள் படிப்பிப்பார்கள். புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார் படுத்திய காலத்திலும் இப்படித்தான்.

நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் வீட்டிலே எல்லோரும் எதையோ ஆவலோடு எதிர்பார்திருப்பது முரளிக்குப் புரிந்தது. “அம்மா கணனியில் பரீட்சை முடிவுகள் வெளிவருகுதாம்” முரளி உற்சாகமாகக் கூறினான். தாயும் உற்சாகமாக, “நீ பாஸ் பண்ணுவே நிசாந்தன்.” என்று கூறினாள் மாதர் சங்கத்தில் மகனின் பரீட்சை முடிவு பற்றி பெருமிதமாக தம்பட்டமடிக்கும் கனவில் மிதக்க ஆரம்பித்து விட்டாள். முரளிக்கு தானும் பரீட்சை எழுதியது நினைவுக்கு வந்தது. பெருமூச்சு விடுவதைத் தவிர அவனால் வேறொன்றும் செய்ய முடியவில்லை.

நிசாந்தன் பரீட்சையில் சித்தியடைவான் என்று வீட்டில் எல்லோரும் நம்பியது போலவே முரளியும் எதிர்பார்த்தான். ஆனால் பெறுபேறு வேறு விதமாக அமைந்து விட்டது. மூன்று புள்ளிகளால் நிசாந்தன் சறுக்கி விட்டான்.

நிசாந்தன் அன்று முழுவதும் சாப்பிடாமல் அழுது கொண்டிருந்தான். அதை விட அவனது பெற்றோர்களும் மிகுந்த கவலையில் இருந்தனர். முரளிக்கும் தனது பரீட்சை முடிவு பற்றி அறிய ஆசையாக இருந்தது. தோட்டத்தில் யாரோடும் தொடர்பில்லை. அப்பனும் இந்தப் பக்கம் திரும்பிப் பார்ப்பது கூட இல்லை.

இதே சமயம் அவனது தோட்டப்பாடசாலையில் ஆசிரியர் பெருமகிழ்ச்சியில் குதூகலித்திருந்தார். அந்தப் பாடசாலை ஆரம்பித்து ஐம்பது வருடங்களுக்கு மேலான போதும் இம்முறை தான் முதற்தடவையாக ஒரு மாணவன் - முரளி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறான். வாத்தியார் ஒரு புறம் மகிழ்ந்தாலும், முரளி படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குப் போய்விட்டானே என்ற ஆதங்கம்!

தனது அபிமான மாணவனின் வெற்றி மீதான களிப்பிலும், அவனது எதிர்காலத்தின் மீதான அக்கறையிலும் வாத்தியார் காளிமுத்துவிடம் வீடு தேடிச் சென்ற போது அவன் நிறை வெறியில் ஒத்தாப்பில் கிடந்தான். முரளி அரசாங்கப் பரீட்சையில் சித்தியடைந்தது பற்றி அவர் கூறிய போதும், காளிமுத்து எது வித உற்சாகமும் காட்டவில்லை.

“காளிமுத்து உன்னுடைய மகன் தான் முதன் முதலாக இந்தத் தோட்டப்பாடசாலையில் இருந்து பாஸ் பண்ணியிருக்கிறான். இனிமே அவனட படிப்புக்கு கவண்மேந்து காசு கொடுக்கும். மாசம் ஐந்நூறு ரூபா கொடுக்கும்” என்று கூறிய ஆசிரியரை முறைத்துப் பார்த்தபடி “சும்மா போங்க வாத்தியாரு” என்று காறி உமிழ்ந்தான்.

படிப்பின் அருமை பெருமை தெரியாமல், பெற்ற பிள்ளையின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காத அவன் மீது வாத்தியாருக்குக் கோபம் தான் வந்தது.


“மகன்ட விலாசமாவது இருந்தா கொடு காளிமுத்து” கெஞ்சாத குறையாக கேட்டார். காளிமுத்து விதண்டா வாதமாகப் பதிலளித்தார். “அவன்ட அட்டரஸ் யாருக்குத் தெரியும்?... இதை விட மாசாமாசம் கூடுதலாக உழைச்சு ஐயாயிரம் அனுப்புறான். சும்மா போய் உங்கட சோலியைப் பாருங்க சேர்”

வாத்தியார் ஏமாற்றத்துடன் திரும்பிய அதேவேளை, கொழும்பில் முரளிக்கு இருப்புக் கொள்ளவில்லை எப்படியும் பரீட்சையில் சித்தியடைந்திருப்பேன் என்று அவனது மனதில ஒலித்துக்கொண்டே இருந்தது. தனது ஆதங்கத்தை ஒருவாறு நிசாந்தனிடம் கூறினான்.

இதை கேட்ட நிசாந்தன், “இதுக்கா யோசிக்கிறே? கொம்பியூட்டரில உன்ர றிசல்ட்டைப் பார்த்து சொல்லுறன்” என அவனிடம் விபரங்களைப் பெற்றுக் கொண்டு கணனி அறைக்குள் சென்றான். அறைக்குள் சென்ற நிசாந்தனின் வரவை ஆவலோடு எதிர்பார்த்தான் முரளி.

“அம்மா முரளி பாஸ் பண்ணியிருக்கிறான் என்று உற்சாகமாகக் கூறியபடி வெளிக்கிட்ட நிசாந்தனை தாயார் மறித்தார். “இதை அவன் கிட்ட சொல்லாத பெயில் என்று சொல்லு” தாயாரின் அதட்டலின் நிசாந்தனின் கள்ளங் கபடமற்ற குழந்தை உள்ளம் சூம்பிப் போனது. அவன் திகைத்து நிற்கையிலே வெளியே சென்ற நிசாந்தனின் தயார். “முரளி நீ பெயிலடா. நிசாந்தனே பாஸ் பண்ணாத பரீட்சையில நீயாவது பாஸ் பண்ணுறதாவது” என்றாள்.

முரளியின் முகம் ஏமாற்றத்தில் தொங்கியது. ஏனோ அம்மாவின் நினைவு அவன் மனதில் தோன்றியது.



# இந்திய விவசாயிகளின் தற்கொலை: புள்ளிவிபரங்கள் சொல்லும் சேதி

மத்திய அரசின் குற்றம் மற்றும் புலனாய்வுத்துறை ஒவ்வொரு ஆண்டிலும் மாநிலவாரியாக விபத்துகளால் ஏற்பட்ட இறப்புகள் மற்றும் தற்கொலை செய்துகொண்டவர்களின் பாலினம், தொழில் மற்றும் அவற்றுக்கான காரணங்கள் அடங்கிய விபரங்களை அறிக்கையாகத் தருகிறது. இந்த அறிக்கைக்கு இந்தியாவில் விபத்துகளால் ஏற்பட்ட இறப்புகள் மற்றும் தற்கொலைகள் (Accidental Deaths and Suicides in India – ADSI) என்று பெயர். இந்த அறிக்கை ஒவ்வொரு வருட்மும் ஜூன் மாதத்தில் அதற்கு முந்தைய ஆண் டின் விபரங்களோடு வெளிவரும். ஆனால் ADSI-2015ஆம் ஆண்டறிக்கை, கடந்த டிசம்பர் 2016 இறுதியில்தான் வெளிவந்தது. அதற்குக் காரணம் என்னவென்பது மத்திய அரசுக்கே வெளிச்சம். ஏனெனில், இந்த அறிக்கையில்தான் ஒவ்வொரு வருடமும் மாநிலவாரியாக எவ்வளவு விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கின்றனர் என்ற விபரங்கள் வெளிவரும். இவ்வறிக்கையின் புள்ளிவிபரங்களின் அடிப்படையில்தான் 1995ஆம் ஆண்டு முதல் விவசாயிகளின் தற்கொலைகள் அதிகம் நிகழும் மாநிலங்களை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். அதைத்தொடர்ந்து, அந்த தற்கொலைகளுக்கான காரணங்களாக விவசாய நெருக்கடிகள் நிலவுவதையும் அவர்கள் வெளிக்கொணர்ந்தனர். எனவே, அதைத் தொடர்ந்து, அரசு எடுத்த நடவடிக்கைகளால் விவசாயிகளின் தற்கொலைகள் எவ்வளவு தூரம் குறைந்திருக்கின்றன என்பதையும் ஒவ்வொரு வருடமும் இந்த அறிக்கையின்மூலம் நாம் காணமுடியும் என்பதால்தான் ADSI அறி க்கை முக்கியத்துவம் பெருகிறது. இந்த நிலையில்தான் 2015ஆம் ஆண்டுக்கான அறிக்கை வெளிவந்திருக்கிறது. இந்த அறிக்கையின்படி, விவசாயிகளின் தற்கொலை நிகழ்வுகளின் போக்கு எவ்வாறு உள்ளதென்று இந்தக் கட்டுரையில் காண்போம்.

2014ஆம் ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், 2015இல் இந்தியாவில் விவசாயிகளின் தற்கொலை 41% அதிகரித்துள்ளது என்பது அதிர்ச்சி தரக்கூடியதாக உள்ளது. தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை 2014இல் 5642 ஆக இருந்தது, 2015இல் 8007 ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா, சத்தீஸ்கர் மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்களில் மட்டும் ஒட்டுமொத்த இந்தியாவில் நடைபெற்ற விவசாயிகளின் தற்கொலையில் 94% நிகழ்ந்துள்ளது. குறிப்பாக, இந்த மாநிலங்களின் பங்கு 2014இல் 92% ஆக இருந்தது, தற்போது அதிகரித்துள்ளது. இந்த மாநிலங்களில்தான் 1990களின் இறுதியிலிருந்து வேளாண் நெருக்கடியின் காரணமாக விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் நிகழ்வுகள் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. இந்த விஷயங்களை சாய்நாத் போன்ற பத்திரிகையாளர்களும் சமூக பொருளாதார ஆய்வாளர்களும் நிரூபித்துக்காட்டியுள்ளனர். தற்போது தமிழகத்தில் ஏற்படும் விவசாயிகளின் தற் கொலைகளைப் பார்க்கும்போது, மேற்கூறிய ஆறு மாநிலங்களோடு தமிழகமும் நடப்பு ஆண்டில் இணைந்துவிடுமோ என்ற அச்சம் வருகிறது.

இது ஒருபுறமிருக்க, மேலே சொன்ன ஆறு மாநிலங்களில் ஒவ்வொரு மாநிலத்திலும் நிலவும் விவசாயிகளின் தற்கொலைகளைப் பற்றிய விபரங்களை தற்போது பார்ப்போம்.

ஆந்திரா மற்றும் தெலங்கானா ஆகியவற்றைச் சேர்த்து, ஒன்றுபட்ட ஆந்திராவாகப் பார்க்கும்போது, அம்மாநிலத்தில் ஏற்பட்ட விவசாயிகளின் தற்கொலைகள் 2014இல் 1058 ஆக இருந்தது 2015இல் 1874 ஆக 77% அதிகரித்துள்ளது என்ற சோகம் தெரிகிறது. மேலும் ஒன்றுபட்ட ஆந்திராவில் நடைபெற்ற ஒட்டுமொத்த தற்கொலைகளில் விவசாயிகளின் பங்கு 2014இல் 7% ஆக இருந்தது 2015இல் 11% ஆக உயர்ந்துள்ளது. குறிப்பாக, மத்தியில் ஆளும் பிஜேபி கூட்டணி அரசின் தளகர்த்தர்களில் ஒருவரான சந்திரபாபு நாயுடு ஆளும் ஆந்திராவில் மட்டும் விவசாயிகளில், தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 2014லிருந்து 2015இல் 223% அதிகரித்துள்ளது என்ற அதிர்ச்சிதரக்கூடிய செய்தி, அரசுகளின் பொறுப்பற்றதன்மையை பறைசாற்றுகிறது.

மற்றொரு மாநிலமான சத்தீஸ்கரில் 2003லிருந்து தொடந்து பிஜேபி ஆண்டுகொண்டிருக்கிறது. இம்மாநிலத்தில் விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கை 2014லிருந்து 2015இல் இரட்டிப்பாகியிருக்கிறது. அதாவது, 443 ஆக இருந்த எண்ணிக்கை 854 ஆக உயர்ந்துள்ளது. மாநிலத்தில் மொத்த தற்கொலை நிகழ்வுகளில் விவசாயிகளின் பங்கு 8%லிருந்து 12% ஆக இந்த ஆண்டுகளில் பெருகியுள்ளது. சத்தீஸ்கரைப் பற்றிய முக்கியமான ஒரு செய்தி இருக்கிறது. இம்மாநிலத்தில் விவசாயிகளின் தற்கொலைகள் நடைபெறுகின்றன என்ற தொடர் விமர்சனங்களை தவிர்க்கும்விதமாக இம்மாநிலம் 2011, 2012, 2013ஆம் ஆண்டுகளில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள எவரும் எந்தக் காரணத்துக்காகவும் தற்கொலை செய்துகொள்ளவில்லை என்று தெரிவித்தது. ஆனால் தற்கொலை செய்துகொண்டவர்களில் இன்ன தொழில் செய்கின்றனர் என்று தெரியாதவர்களின் பகுதியில் விவசாயிகளை காட்டினார்கள். இதையும் ஆய்வாளர்களும் பத்திரிகைகளும் விமர்சித்த பின்பு 2014 லிருந்து விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கையை மாநில அரசு காட்டத் தொடங்கியது. இவ்வாறு புள்ளிவிபரங்கள் தருவதில் மாநில அரசு எவ்வாறு தலையிட முடியும் என்பதை இறுதியில் பார்ப்போம். ஆனால் பிரச்னைகளை எவ்வாறு மாநில அரசுகள் அங்கீகரிக்க மறுக்கின்றன என்பதற்கு சத்தீஸ்கர் ஒரு எடுத்துக்காட்டு.

அடுத்து, நமது மற்றுமொரு அண்டை மாநிலமான கர்நாடகாவுக்கு வருவோம். இம்மாநிலத்தில் காங்கிரசும் பிஜேபி-யும் மாறி மாறி சமீப காலங்களில் ஆட்சி புரிகின்றன. ஆனால் இம்மாநிலத்திலும் தற்கொலை செய்துகொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை 2014இல் 321 ஆக இருந்து 2015இல் 1195 ஆக 251% அதிகரித்துள்ளது. மேலும் அம்மாநிலத்தில் நடைபெற்ற மொத்த தற்கொலைகளில் விவசாயிகளின் பங்கு 3%லிருந்து 11%ஆக பெருகியுள்ளது என்ற அதிர்ச்சிதரக்கூடிய செய்தியின் மூலம் பிரச்னையின் வீரியத்தை அரிய முடியும். ஆனால் இப்படி ஒரு பிரச்னை இருப்பதாகவே மாநில அரசு காட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. எந்தக் கட்சி ஆண்டாலும் விவசாயியின் துயரம் மாறாது என்பதற்கு கர்நாடகாவும் ஒரு உதாரணம்.

அடுத்து 'விவசாயிகளின் தற்கொலை' என்ற சொல்லைக் கேட்டவுடன் அனைவரின் நினைவுக்குவரும் மாநிலமான மகாராஷ்டிராவைப் பற்றி பார்ப்போம். இம்மாநிலத்தில், தற்போது பிஜேபி-யின் ஆட்சி நடைபெற்று வருகிறது. விவசாயிகளின் தற்கொலைகளை தடுப்பதற்காகவே மத்திய மற்றும் மாநில அரசுகளால் பல்வேறு திட்டங்கள் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருவதாக அரசுகள் கூறிக்கொண்டிருக்கின்றன. ஆனால் உண்மை நிலை என்ன என்பதை ADSI 2015 அறிக்கையை ஆராய்வதன்மூலம் பார்ப்போம்.

மகாராஷ்டிராவில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை 2014இல் 2568 ஆக இருந்தது, 2015இல் 3030 ஆக 18மூ அதிகரித்துள்ளது. மேலும் ஒட்டுமொத்த இந்தியாவில் நடைபெறும் விவசாயிகளின் தற்கொலைகளில் 38% மகாராஷ்டிராவில் நடைபெறுகிறது என்ற விபரத்தின்மூலம் இத்துயரத்தின் வீரியத்தை நாம் உணரமுடியும். இவர்களில் அநேகமானவர்கள் BT பருத்தி விவசாயம் செய்யும் விவசாயிக்ள் என்று கள ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

விவசாயிகளின் தற்கொலை நிகழ்வுகள் பெருமளவில் நடைபெறும் ஆறு மாநிலங்களில் இறுதியாக நாம் பார்ப்பது மத்தியப்பிரதேசமாகும். இம்மாநிலத்திலும் பிஜேபியின் ஆட்சிதான் நடைபெறுகிறது. மத்தியப் பிரதேசத்திலிருந்து தான் சத்தீஸ்கர் 2000இல் பிரிந்தது என்பதால் ஒப்பீடுகளுக்காக நாம் ம த்தியப் பிரதேசத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்வோம். இம்மாநிலத்தில் மட்டும் தான் விவசாயிகளின் தற்கொலை எண் ணிக்கை 2014-லிருந்து 2015இல் குறைந்து ள்ளது என்பது சற்று ஆறுதல்தரக்கூடிய ஒன்று.

எனவே, இந்தியாவில் 90%க்கு மேல் விவசாயிகள். தற்கொலை நிகழும் மாநிலங்களில் மத்தியப்பிரதேசம் தவிர அனைத்து மாநிலுங்களிலும் இந்த எண்ணிக்கை 2015இல் அதி கரித்துள்ளது என்பது நமக்குப் புல னாகிறது. இவற்றைப்பற்றிய சம்பந் தப்பட்ட மாநிலங்களோ அல்லது மத்திய அரசோ எந்தவித கவலையும் அடைந்ததாகத் தெரியவில்லை. இந்த துயரங்களிலிருந்து விவசாயிகளை மீட்கவும், வேளாண் நெருக்கடிகளிலிருந்து காப்பாற்றவும் அரசு சார்பில் செய்யப்படும் முதலீடுகள் அதிகரிக்கப்படவில்லை. மாறாக, 1992-93களுக்குப் பிந்தைய நடைமுறையான வேளாண்மையில் அரசு முதலீடுகளின் அளவை குறைப்பதை தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். மேலும் விவசாயத்தைப் பற்றிய ஆய்வுகள் மற் றும் மேம்பாட்டு நடவடிக்கைகளும் பெருமளவில் குறைக்கப்பட்டதன் மூலம் விவசாயத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளது. இவற்றின் விளைவாகவும், வேளாண் விரிவாக்கப் பணிகள் நடைபெறாததாலும் விவசாயிகள் பெரும்பாலும் தனியார் முதலீடுகளையும், தனியார் உர மற்றும் பூச்சிமருந்துக் கடைகளின் ஆலோசனைகளையும் சார்ந்து இருக்கவேண்டிய கட்டாயம் நீடிக்கிறது. ஆனால் லாபம் மட்டுமே தனியாரின் நோக்கமாக இருப்பதால், விவ சாயிகளின் செலவு அதிகரித்து கடன் பெருகி தத்தளிக்கின்றனர். மறுபுறம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் தரப்படும்

15»

14» கடன்களில் முன்னுரிமை தரும் வேளாண்சார்ந்த பட்டியலில் வேளாண் பதப்படுத்துதல் துறைகளையும் சேர்த்ததால், வேளாண் பதப்படுத்துதல் தொழிற்சாலைகள் (Agro Processing Industries) வைத்துள்ள பெரு நிறுவனங்கள் வங்கிக் கடன்களை கபளீகரம் செய்கின்றன. இதனால், விவசாயிகள் தனியாரிடம் கொள்ளை வட்டிக்கு கடன் வாங்கி அதைக் கட்ட முடியாமல் தற்கொலை செய்யும் முடிவுக்குச் செல்கின்றனர். வருடாவருடம் விவசாயிகளின் தற்கொலைகள் அதிகரித்துவருவதைப் பார்க்கையில் நாம் மேலேகூறிய நிலைகளில் எந்தவித மாற்றமும் அரசாங்கங்களால் செய்யப்படவில்லை என்பது தெள்ளத்தெளிவாக விளங்குகிறது.

இதில் உச்சகட்ட கொடுமை என்னவென்றால், இந்த துயரத்தை மறைப்பதற்கு மாநில அரசாங்கங்கள் செய்யும் செயல்கள். ஏற்கனவே சத்தீஸ்கர் மாநிலத்தின் நடவடிக்கையை இதற்கு உதாரணமாக நாம் பார்த்தோம். மேலும் 42 லட்சத்துக்கும் மேல் விவசாயிகளைக் கொண்ட மேற்குவங்கத்தில் ஓர் விவசாயிகூட எந்த ஒரு காரணத்துக்காகவும் தற்கொலை செய்துகொள்ளவில்லை என்று அந்த மாநில அரசு, 2011ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மற்றவரின் காதில் பூ வைத்துக் கொண்டிருக்கிறது. இது சாத்தியமான ஒன்றா என்ற கேள்வி எழும்போது, அதன் தொடர்ச்சியாக மேலும் சில கேள்விகளும் எழுகின்றன. இந்த புள்ளிவிபரங்களை யார் தருகிறார்கள்? மாநில அரசுகள் எவ்வாறு புள்ளிவிபரங்களில் தகிடுதத்தம் செய்ய முடியும்? என்பன ஏனைய கேள்விகள்.

ADSI-யில் இருக்கும் புள்ளிவிபரங்கள் காவல் நிலையங்களின் முதல் தகவல் அறிக்கைகளிலிருந்து திரட்டப்பட்டதாகும். அதாவது, ஒருவர் தற்கொலை செய்துகொண்டார் என்று காவல் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டால் மட்டுமே அவர் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவார். எனவே, ஒரு மாநிலத்தில் இருக்கும் காவல் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் மக்கள் இந்த காவல் நிலையங்களை அணுகும் தன்மையில் இருத்தலும் தான் தற்கொலைகள் பதிவுசெய்யும் எண்ணிக்கையை தீர்மானிக்கின்றன. இதனால்தான், பீகார் மற்றும் உத்திரப்பிரதேசத்தில் ஒப்பீட்டளவில் குறைந்தபட்ச தற்கொலைகள் பதிவாகின்றன. எனவே, ADSI அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ள தற்கொலைகளின் எண்ணிக்கை என்பது குறைந்தபட்சம் என்று நாம் கணக்கில் எடுத்துகொள்ள வேண்டும்.

சரி. இதில் விவசாயிகளின் தற்கொலைகளை மறைக்கும் நடவடிக்கை எங்கே நடைபெறுகிறது? தற்கொலை செய்துகொண்ட ஒரு விவசாயியை விவசாயத் தொழிலாளியாகவோ அல்லது ஏனைய தொழில்செய்பவராகவோ காவல் நிலையத்தில் அல்லது அந்தத் தகவல்கள் திரட்டப்படும் இடங்களின் பதிவில் வாய்ப்பு உள்ளது. அதுவும், தற்கொலை செய்துகொள்பவர், சிறு மற்றும் குறு விவசாயியாக இருக்கும்பட்சத்தில் இது மிகவும் எளிது. சுமார் 42.5 லட்சம் விவசாயிகள் உள்ள தமிழ்நாட்டில் வெறும் 2 பேர் மட்டுமே 2015இல் தற்கொலை செய்துகொண்டனர் என்ற கணக்கைப் பார்க்கையில், இவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் விவசாயத் தொழிலாளிகளாக பதிவு செய்யப்பட்டிருக்கலாம் என்பது நமக்குப் புலனாகிறது. இதை ஒரு உதாரணத்துக்காகச் சொன்னேன். இந்த வழியை வைத்துக்கொண்டு தான், விவசாயிகளின் தற்கொலைகள் அதிகம் நிகழும் மாநிலங்கள் அவற்றை குறைத்துக் காட்ட முயலுகின்றன. அவ்வாறு முயன்றுமே, தற்போதைய அளவு அபரிமிதமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மாநில அரசுகள் விவசாயிகளுக்கு எதிராக புள்ளிவிவரங்களை மாற்றும்போது மத்திய அரசு மட்டும் என்ன சாமானியமா? அதிலும் விவசாயத்தை நசுக்க என்ன வேண்டுமானாலும் செய்ய முயலுவதில் குறியாகவுள்ள தற்போதைய அரசு சும்மாவிடுமா என்ன? விவசாயிகளின் தற்கொலைகளை 1995 முதல் 2013 வரை ADSI ஆண்டறிக்கையில் 'சுய வேலைவாய்ப்பில் உள்ளவர்கள்' (Self-Employed) பிரிவில் 'விவசாயம் செய்பவர்கள்' (Farming) என்ற உட்பிரிவில் காட்டிக்கொண்டிருந்தனர். சரி, விவசாயிகள் தங்களது நிலங்களிலோ அல்லது குத்தகை நிலங்களிலோ சொந்தமாக விவசாயம் செய்பவர்களாகையால் அவர்கள் சுய வேலைவாய்ப்பில் உள்ளவர்கள் என்று நாம் நினைத்துக்கொண்டிருந்தால், 2014 இல் ஒரு பெரும் கண்டுபிடிப்பை மைய அரசு வெளியிட்டது. அதாவது, சுய வேலைவாய்ப்பில் உள்ளவர்கள் பிரிவில் 'விவசாயத்தில் உள்ளவர்கள்' என்ற உட்பிரிவில் 'விவசாயிகள்' (Farmers) மற்றும் 'விவசாய கூலித் தொழிலாளர்கள்' (Agricultural Labourers) என்று வகைப்படுத்தினார்கள். இதன்மூலம் அரசு சொல்வது, இதுவரை 'விவசாயம் செய்பவர்கள்' என்று சொன்னது 'விவசாயிகள்' மற்றும் 'விவசாய கூலித் தொழிலாளர்கள்' ஆகியோர்களை இணைத்தே என்று புதிய கண்டுபிடிப்பை சொல்லாமல் சொன்னார்கள். எனவே, விவசாயிகளின் தற்கொலைகள் என்பது ஆய்வாளர்களும் பத்திரிகைகளும் சொல்வதுபோல பெரிய பிரச்னையில்லை என்பதையும் சொல்லாமல் சொன்னார்கள். இது எவ்வளவு பெரிய மோசடித்தனம்? விமர்சனங்களைத் தவிர்ப்பதற்காக, கூலித் தொழிலாளர்களை சுய வேலைவாய்ப்பில் உள்ளவர்கள் என்றும் கூறத் தயங்கவில்லை, உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாட்டின் அரசு. இது அரச பயங்கரவாதமில்லையா?

எனவே, விவசாயிகளின் தற்கொலைகள் ஒருபுறம் தொடர்ந்துகொண்டிருக்க; அதை தடுக்கவேண்டிய அரசாங்கங்களோ, புள்ளிவிபரங்களை மாற்றி மக்களை எப்படி ஏமாற்றமுடியும் என்று வழி தேடிக் கொண்டிருக்கிறது. முந்தைய காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியிலாவது "வாய்திறவாத" மன்மோகன் சிங் ஓரளவு இந்தத் துயரத்தை ஒத்துக்கொண்டு சில திட்டங்களை அறிவித்தார். ஆனால் விவசாயிகளின் தற்கொலைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்ற செய்தியே, தற்போதைய அரசுக்குத் தெரிகிறதா என்பதே நமக்கு ஐயமாக உள்ளது.

**ரா.கோபிநாத்**

**பொருளாதாரத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். இவர், இந்திய ஊரக பொருளாதாரம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.**

# ஆர். எஸ். எஸ். இற்கு எதிராகக் கேரளா முதல்வர்

இந்தியாவின் இந்துத்துவ மதவாத அமைப்பான ஆர் எஸ் எஸ் அமைப்பு இன நல்லிணக்கத்தைக் கெடுக்கும் பல்வேறு நடவடிக்கைகலிம் ஈடுபட்டு வருகின்றமை இந்திய அரசியலில் சர்வ சாதாரணமான விடயமாகும். பல மாநிலங்களில் ஆர் எஸ் எஸ் அமைப்பு பல்வேறு சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் கேரளா மாநிலத்தில் தமது வெளிப்படையான மதவாத செயற்பாடுகளில் ஈடுபட முடியாமல் இருப்பது ஆர் எஸ் எஸ் அமைப்பினரைக் கடும் கோபத்திற்கு உள்ளாக்கியுள்ளது. இதானல் பல முறை வன்முறைகள் ஏற்பட முயன்ற போதிலும், மதவாதிகள் மீது வித்க்கப்பட்டுள்ள பல இறுக்கமான கட்டுப்பாடுகளினால் அவை இலகுவாகத் தோற்கடிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து அவர்களது சதிகார வேலைகள் கர்நாடகாவில் அரங்கேறியது மட்டுமல்லாமல், அதனைத் தடுக்க முயன்றவர்களின் மீதும் ஓடுக்கு முறை கட்டவித்து விடப்பட்டது. ஆர் எஸ் எஸ் இற்கு எதிராகக் குரல் எழுப்பி வருபவர்களின் மீது அண்மையில் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து மங்களூரு நேரு விளை யாட்டு மைதானத்தில் கடந்த பெப்ரவரி 25ம் திகதி இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய கேரளா முதல்வர்,

"கர்நாடகத்தில் கல்புர்கி, கோவிந்தபன்சாரே உள்ளிட்ட ஏராளமான கவிஞர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரால் கொல்லப் பட்டுள்ளனர். எழுத்தாளர் பகவான் கிரீஸ் கர்னாடுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். எழுத்தாளர் கிரீஷ் உத்தங்கி என்பவரின் விரல்களைத் துண்டிப்போம் என்று ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் கூறியுள்ளனர். கர்நாடகத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் அனந்தமூர்த்திக்கும் அவர்கள் மிரட்டல் விடுத்தனர்.


ஆர்.எஸ்.எஸ். அமைப்பால் மக்களின் சுதந்திரம் பறிபோய் விட்டது. தனது சொந்த நாட்டில் சொந்த கருத்துகளை மக்கள் சொல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர். இந்திய நாடு ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சொத்து இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர், இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்களுடன் ஒப்பந்தம் போட்டு, மக்களிடையே பிரிவினைவாதத்தை ஏற்படுத்திவிட்டனர்.

காந்தியார் கொல்லப்பட்ட தினத்தை இனிப்பு வழங்கிக் கொண்டாடியவர்கள்தான் இந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர். இந்த அமைப்பின் மூத்த தலைவர்கள், சர்வாதிகாரி முசோலினியுடன் தொடர்பில் இருந்தவர்கள். அவரது சிந்தனைகளைத்தான் இந்தி யாவில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு திணித்து வருகிறது. ஹிட்லர் அரசாட்சியின் தத்துவங்களை ஆர்.எஸ்.எஸ். பின்பற்றி வருகிறது. மொத்தத்தில் சிறுபான்மையின மக்களை துன்புறுத்தும் வேலை களிலும் அந்த அமைப்பு ஈடுபட்டு வருகிறது" என்றார்.

கேரளாவில் ஆர் எஸ் எஸ் பயங்கரவாதிகள் மதக் கலவரங்களை ஏற்படுத்த முயன்ற வேளையில், அக்காலத்தில் ஒரு இளைஞனாக இருந்த பிரணாயி விஜயன் அவர்கள் , அக் கலவங்களைத் தடுக்கப் பாடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**- ரஞ்சிதன் -**

# பட்டினியில் யேமன், 70 இலட்சம் பேர் பாதிப்பு



கடந்த மார்ச் இலிருந்து சவூதி அரேபிய அமெரிக்கக் கூட்டுப் படைகளினால் யேமன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத் தாக்குதல்களினால் சுமார் எழுபது இலட்சம் எமன் மக்கள் பட்டினியை எதிர் நோக்கியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எமன் நாட்டின் உட்கட்டமைப்பில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ள இத் தாக்குதல்களினால் பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாகவும், பல மில்லியன் பேர் இடம் பெயர்ந்துள்ளதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

மத்திய கிழக்கு நாடுகளில் மிகவும் வரியா நாடான யேமன் நாட்டின் மீது ஐக்கிய அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் தொடர்ந்தும் குண்டு வீச்சில் ஈடுபட்டு வருகின்றது. கிட்டத்தட்ட 462,000 பிள்ளைகள் போஷணைக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் மரண அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் யுனிசெப் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளது. அவர்காலத்து அறிக்கையில் மேலும், சுமார் பத்து நிமிடங்களுக்கு ஒரு பிள்ளையாவது தடுக்கப்படக் கூடிய நோய்களாகிய போஷாக்கின்மை, வயிற்றுப் போக்கு மற்றும் சுவாச நோய்கள் போன்றவற்றால் உயிரிழக்கின்றதென்று தெரிவிக்கப்படுகின்றது. இக் கூட்டுப் படைகளின் வான் வழித் தாக்குதலினால் பல மருத்துவ மனைகள் முற்றிலும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

**- ரஞ்சிதன் -**

# சித்திரம் பேசுதடி

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் பெயர்ப் பலகைக்கே இப்படியென்றால்?






உலகில் மனிதாபிமானம் இன்னும் எந்த மூலையிலோ இருந்துகொண்டு தான் இருக்கின்றது...



சுதந்திரம் இல்லாத கேப்பாபுலவிற்கு சுதந்திரம் கிடைப்பது எப்போது? என்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பி யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் கலந்துரையாடுகிறார்.



வறுமை ஒழியவில்லை. வயிற்றுப் பசிக்காய் உழைத்த என் கைகளின் வடுக்களும் மாறவில்லை. இருந்தும் நான் புன்னகைக்கிறேன்.



"மழை வருமா?" இந்தியாவில் வறட்சியால் ஏங்கித் தவிக்கும் பல லட்சக்கணக்கான ஏழை விவசாயிகளுள் ஒருவர்..

மகரகம தம்பஹேன வீதி, சமன் உயன, இல.22/13/1/1 என்ற விலாசத்தில் உள்ள, P2 பிரைவெட் லிமிடெட் தனியார் நிறுவனத்தினால் கங்கொடவில, வலவ்வத்த வீதியில், 43/43 என்ற டீ.ரீ.எல் பிரைவெட் லிமிடெட்டில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.